"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

பூலோகவியாஸன்.

பிரதி மாதமும் பிரசுரஞ் செய்யப்படும்.

தொகுதி 3.] சென்னை, 1906வரு மேமீ 5உ [பகுதி 8.

உ

திருவருட்சகாயம்.

திருக்குருகூர் - ஸ்ரீமத் - ஞானசித்தமூர்த்திகள்
திருவாய்மலர்ந்தருளிய
வெண்பா.

மேலோக மாதிபுகழ் மிக்கோர்சொன் னூல்வழிசெல்
பூலோக வியாஸப் புத்திரநின்—கோலா
கலங்கண்டே னின்வழியே காசினியோர் மேவப்
பலந்தந்தே யாளும் பரை.

கோயமுத்தூர்ஜில்லா, காங்கயம், அஷ்டாவதானம், சிலேடைச்சிங்கம்,
ம-ள-ள-ஸ்ரீ, V. சேஷாசலநாயடு அவர்கள் பாடிய
மங்கலவாழ்த்து வெண்பா.

மேலோ கவியாஸன் வித்வஜன பூஷணனெம்
பூலோ கவியாஸன் பூணணிமின்—வீலோக
மாலோ கவியாஸன் மார்க்கமுறு வீரிலேச்சா
வாலோ கவியாஸன் மம்.

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல் ஸ்ரீ தக்ஷணாமூர்த்திகராலயம்
ஓம் அசலபீடம் ஸ்ரீ சரஸ்வதி ஆசிரமத்தற்குப்

பூலோக வியாஸன் பத்திரிகையும் ஸ்ரீமான் பூஞ்சோலை - முத்துவீர உபாத்தியாயர் அவர்களனுப்பிய மற்றும்பல நூல்களும் கிடைத்தபோது வேலைநகர் சாது, கோ. துளசிங்க சுவாமிகள்

(நவின்ற பொருத்த வெண்பா.)

பொன்சிறப்போ நூற்சிறப்போ போஷகரார் செப்பென்னில்
கண்சிறப்பே மற்றவைகள் காண்சிறிது;—தண்சிறப்பே
சத்துபூ லோகவியாஸ் சன்னதராம் பூஞ்சோலை
முத்துவீ ரப்பேர் மொழி.

வத்துநிலை யின்னதென வாலாய மாய்ப்புகலும்
சித்துடையா ரார்மனமே செப்பென்னில்;—அத்தகையோர்
பூலோ கவியாஸ புஷ்பமீ பூஞ்சோலை
மேலோனே முத்துவீர வேல்.

புதுவருடவாழ்த்து.

பண்டிதாசிரோமணி

மாது-ஸ்ரீ - மனோன்மணியம்மாளியற்றியது.

சால்புமுல்லை.

மாதமொரு முறைதமிழ்நா டெங்கணுஞ்சென் றேயுலவி பதித்தற் கேற்ற
சாதகமா யுற்றவை தீகலெள கீகெநறி சதுராச் சாற்றித்
தீதகல வெவவரையுநல் லொழுக்கத்தி லேவைக்குந் திறமை வாய்ந்த
வோதரிய பூலோக வியாஸனற் புகழெங்கு மோங்கி வாழ்க.

சித்தாந்தப்பிரகாசம்.

(134 - வது பக்கத்தொடர்ச்சி.)

வேறோரறிவினா லறியுமென்றதென்னை ஆன்மாத்தானே யெவற்றையுமறியும் அறிவுகாணுமென்னுஞ் சாங்கியனும், அயிக்கவாதியுஞ் சொல்லில் இந்திரியங்கள் வேண்டாவாய் முடியும். ஆன்மா அறிவுடையதன்றென்று நியாய வைசேடிகர் சொல்லில் அறிவில்லாத ஆன்மாவுக்குக் கருவிகள் எற்றுக்கு? இந்திரியங்கள் ஆன்மாவுக்கு அறியு முறைமையைக் கொடுக்குமென்று சங்கிராந்தவாதி சொல்லில் அவைசடம் ஆகலிற் கொடுக்கமாட்டாது. முற்றுணர்வினாகிய முதல்வன் கருவிகளாலே ஆன்மாவுக்கு அறியு முறைமையைக் கொடுப்பனென்று பரிணாமவாதி சொல்லில், அப்பொழுது ஆன்மாச்சடமாக வேண்டும். ஆதலாலே முதல்வன் சடத்துக்கு அறிவைக்கொடான். முதல்வனொருவனுளனேல் அவன் என்னாலறியப்படானோ வெனில் ஆன்மாவினது சிற்றறிவினால் அறியப்பட்ட பொருளெல்லாம் நிலையில்லாத துண்மையென்றறிவாய் ஆனாற் சத்தாகிய முதல்வன் என்னால் ஏப்பொழுதும் அறியப்படாதோவென்னில்? ஒருகாலத்தினு முதல்வன் ஆன்மாவால் அறியாதிருக்குபாகில் இவனுக்கு முதல்வனைக் கொண்டாவதொரு பிரயோசனமு மில்லாமை உண்மையாம் ஆனால் என்னாலறியப்பட்ட தெல்லாம் அசத்தென்று சொன்னதெனனையெனில், அனாதியாய் வருகின்ற பசுபோதமாவது ஒருவிடயத்தை இந்திரியங்களாலே முற்பட்டுப் பொருந்தி அதுவதுவாகச் சுட்டி அறியப்படும் பொருள்காண் அசத்தென்றது. அந்த முதல்வன் இந்தச் சுட்டறிவால் அறியப்படாது. அந்த வசத்தை யசத்தென்றறிந்தது எவ்வறிவுதானென்னில்? சிற்றறிவுடையது தானாக வொன்றையு மறியாதாதலின் உயிரானது அசத்தைச சத்தென்றே யிருப்பதொழிந்து அசத்தென்று அறியமாட்டாது. முற்றறிவுடைய முதல்வன் ஒன்றையிதுவெனச் சுட்டி அறியான். அன்றி இவர்களையொழிந்த கருவிகள் சடமாகையாலே பாசஞானம் அறியாது. சிற்றறிவான வான்மாவும் அதக்குக் கருவியாகச் சிறந்த சடமுங்கூடி யறியுமென்னில் விளக்கமுண்டாகாது. அருளான முதல்வனும் உயிருங்கூடி அறியுமென்னிற் பெத்தத்திலே ஆன்மா அருளிற்பொருந்தாது. மற்றைப் பதியும்

பாசமுங்கூடி யறியுமென்னில் ஒளியுமிருளு மோரிடத்தினில்லா. அசத்தான பாசஞ்சடமாகையால் சத்தாகிய முதல்வனை இதுவென்று சுட்டிஅறியமாட்டாது, சத்தாகிய முதல்வன் வியர்த்தமாகையால் அசத்தை இதுவென் றறிந்து நீங்காவேண்டா. மலபாகத்தாற் பிரகாசித்த அருளாலே பாசம் இது சிவம் இதுவென்றறிகிற ஆன்மாவானது இருளிலே நின்றபோது இருளாயும் ஒளியிலே நின்றபோது ஒளியாயும் இருளுமொளியு மில்லாத கண்ணின்றன்மைபோலும் தன்மையுடையதாம் ஆகவே முன்கூடிநின்ற மலங்களைச் சிவத்துடனே கூடிநின்று போக்குமுறைமையாலே அவ்வான்மாவுக்குச் சதசத்தென்றபெயராம். கண்ணுக்கு ஒளியை விளக்குக் கொடுத்துப் பொருள்களைத் தெரிசிப்பிக்குமென்று நிமித்தபரிணமவாதி சொல்லின் முன்புகண்ணுக்கு ஒரு பிரகாசமுமில்லையாய் முடியும். விளக்கொளி கலக்கப்பட்டவற்றைக் கண்ணிற் பிரகாசமானது வேறாகநின்றேகாணும். இப்படி அகலநின்றுகாண்கையிலும் விளக்கொளியொடு காண்டலன்றிக் கண்ணொளிகள் தாமே காணமாட்டா. கண்ணொளியும் விளக்கொளியும் தம்மிற் கலந்துநிற்கும். கலந்தாலும் பொருந்திய பொருள்கள் அயிக்கத்தால் ஒன்றெனலின்றிப் பொருளிரண்டேயென்க. யோகிகள் ஆன்மாத்தேகத்தில் ஏகதேசத்திலே யிருந்தறியுமென்னு மதுவும், சமணன் மாயாகாரியமான தேகத்திலே நிறைந்துநின்றறியுமென்னுமதுவும், மாயாவாதி ஆகாயம்போல் எவ்விடத்தும் பூரணமாய் நின்றறியுமென்னுமதுவும், சாங்கியனும் அயிக்கவாதியும் அவிகாரவாதியும் ஒருகர்த்தா அறிவியாமல் ஆன்மாத்தானே உயர்ந்த வறிவாம் நிற்குமென்னுமதுவும், நியாயவைசேடிகர் குற்றத்தையுடைய மனமுதலிய கருவிகள் அதற்கறிவைக் கொடுக்குமென்னு மதுவும் என்றெண்ணப்படு மிவற்றைச் சைவசித்தாந்திகள் சொல்லார்கள். ஆன்மா அறியுமுண்மையை விசாரிக்குமிடத்து விளக்கந்தரும் படிகம்போல அடுத்ததன்றன்மையாய் நின்றறியுமென்க. இன்னும் ஆன்மா ஓரிடத்திருப்பின் ஏகதேசவுருவாய்ச் சடமாய் மற்றுள்ள விடங்களில் அறிவுமற்று அழியும், உடன்முழுது நிற்பின் அவத்தைப்படுங் குற்றமும், உடல்வளர வளர்ந்து சிறுகச்சிறுகுதலாகிய சங்கோச விகாசதன்மம் என்னுங் குற்றமும், இந்திரியமைந்தும் புலன்களைந்தையு மொருகாலத்திலே நுகராகுற்றமும், உடல்வளர வளர்ந்து சிறுகச்சிறுகுதலாகிய அவயவங்குறைய ஆன்மாவுஞ் சின்னபின்னப்படுங் குற்றமுமுமேறும். எவ்விடமு நின்றறியிற் போக்குவரவுடைய குற்றமும், ஒருவன் கருத்தை யொருவ னறியானென்னுங் குற்றமுந்தங்கும். தானேயறியில் அவத்தை படுவதும் ஒருவரறிவிக்க வறியுங்குற்றமும், கருவிகளாலறியுங் குற்றமுமுளவாம். கருவிகள் அறிவைக் கொடுப்பின் ஆன்மாவுக்குச் சடத்துவமுண்டாம். அறியுஞ் சடமான கருவிகளொன்றுக்கு அறிவைக்கொடுக்கமாட்டா. ஆகையால் இவை முழுவதும் நல்லோர் சொல்லார்.

ஆன்மாவின் அவத்தைத்தன்மை.

மூலாதாரத்திலே ஆன்மா ஆணவமலமேயாய் எண்ணுதற்கு ஒருகருவிகளுமின்றி நின்றவலதாம் அதீதம், துரியத்திலே பிராணவாயுவொன்றுபொ

ருந்தும். சுழுத்தியிலே விருப்பமுடைய சித்தமொன்று பொருந்தும். சொப்பனவத்தையிலே சத்தாதியைந்தும் வசனாதியைந்தும் மனம்புத்தி அகங்கார மூன்றுமாகிய பதின்மூன்றுமாம். இவையன்றி நின்ற பிராணவாயுக்கள் ஒன்பதும் பொருந்தும். சாக்கிரத்தின் ஞானேந்திரியங்களைந்தும் அதன் வழி எண்ணுவதாயகன் மேந்திரியங்களைந்தும் பொருந்தும் ஆராயுமிடத்து இத்தானங்கடோறும் இந்தமுறையே கருவிகள் பொருந்தும். இச்சகலாவத்தைப் பதினைந்துவிதப்படும். அவை:—சகலத்திற் கேவலமொன்றும், சகலத்திற் சகலமொன்பதும் சகலத்திற் சுத்தமைந்துமாம். சகலத்திற் கேவலமொன்றாவது அதீதம். சகலத்திற் சகலம் ஒன்பதாவது மத்தியாலவத்தையைந்துங் கீழாலவத்தையிற் சாக்கிரமுதனான்குமாம். மத்தியாலவத்தையும் சகலத்திற் சுத்தமைந்து மேற்காட்டுதும், கீழாவத்தையைந்திற் சாக்கிரத்திற் கருவிமுப்பத்தைந்து, சொப்பனத்திற்கருவி இருபத்தைந்து, சுழுத்தியிற் கருவிமூன்று, துரியத்திற்கருவி இரண்டு, அதீதத்திலொன்று. இனிச்சாக்கிரத்திலே இந்திரியம் பத்துநிற்க நின்ற இருபத்தைந்துடனே சொப்பனவத்தையுறுவன் இவ்விடத்தில் அறிகருவியான இந்திரியங்களின்றி யிருக்கையிலும் சாக்கிரத்திற்கண்டவோதனை சொல்லமாட்டாமல் நிற்றல்பற்றி நிச்சயத்தெழுங்கருவிகளாண்டின்மையின் அறிவு ஒழுகக்காய்ந்த விருப்பு இறுகிச் சிறிது சிவப்புநின்றாற்போலவும் பவுரிசுழன்றவன் அதுநீங்கியிருந்த விடத்தும் அந்தப்பிரமைநின்றாற்போலவும் யானைகண்டவன் ஓடிப்போய் மீண்டுவரும்பொழுது அவ்வியானை யாண்டில்லா திருக்கவும் மனத்தின் கணிக்குமாறு போலவுமாம். (இன்னும்வரும்) சித்தாந்தசரபம்.

உலகர் புராண சாரசங்கிரகம்.

(131-ம் பக்கத்தொடர்ச்சி.)

தேகஞானி:—ஹே! ஆத்மஞானி என்னைச்சார்ந்த லோகஞானிகள் செய்யும் காரியமும், சொல்லும் சொற்களும் பயனற்றதென நீர்உணர்ந்தீர் போலும். என்மரபினர் எவ்வளவு பொறுமையாளர் எவ்வளவு அனுபோக வார்த்தைகள் கூறுகின்றனர் உனக்குத் தெரியுமா வென்றனன்.

ஆத்மஞானி:—அப்பா தேகஞானி! பேய்க்கூத்தைக் கழுதையுணர்ந்து மெச்சித் தெரிவிக்கக் கூச்சலிவேதுபோலும் கூத்திமகனைக் கோணிவாக்கத் தான் கொண்டாடுவதுபோலும் நீகூறும் வார்த்தைகள். உன்மரபினர் பிறர் அவசரப்படும்போது அவரை அவசரப்படவேண்டாமென்று தடுக்கும் தாங்கள் அவசரப்படுவதை இதில் எழுதமுடியாது. (26) தானத்திற் பெரிய நிதானமதென்று தானறிந்துரைத்துத் தடமாடிடுவர் (27) அவசரக்காரனறிவிலியென்று எவர்க்கு முரைத்து ஏமாந்திலவர். இஃதன்றி நின்மரபினர் கேட்கும் பெண்மதி சாஸ்திரம் கேட்கக்! கேட்க! ஆநந்தமாயிருக்கிறது. அஃதியாதெனில் (28) வீட்டின் விளக்கில் வேற்றுவரேற்றிடில், வீட்டின் லட்சுமி வெளிபோச்சென்பர். (29) கண்ணிலுள்ள கருவிழி வெண்விழி, கடத்திலிட்டுக் கவிழ்க்கக் கடையரின் (30) கண்திருஷ்டிகளும் கழிந்திடுமென்று, கரு

திச்சொல்லும் கயவரறிவிலர். (31) நாயிறுநாளில் நாங்கள் மோரிடில், போயிருந்தழியும் பொன்மண்ணென்பர். (32) இரவிலிரும்பு விறுத்திடும் சுண்ணம், இரந்திடுவோர்க்கியொணாதென்பர். (33) கூரைவீட்டிற் குடியுள்ளோர்கள், கூரையோடிடக் கூடாதென்பர். (34) ஓட்டுவீட்டிலுள்ள பித்தர்கள், ஓட்டுஞ் சாமிபோலை மூடிடில் என்றுகூறும் பெண்மொழிகளை வேதவாக்கியமாக நம்பிக்கெட்டலைவது நன்றல்ல. என்றும் இரப்பவர்க்கிட்டு நீயுமுண்டு திருப்தியடைந்து கடவுளையடைய விரும்பாமல் இப்படி பெண்களுபதேசம் கேட்டு கெட்டுப்போவது நன்றா?

தேகஞானி:—தந்திரவார்த்தைகள்கூறும் ஆத்மஞானியே! பெரியோர்கள் வழக்கத்தை அனுஷ்டிக்காவிடில் காரியம்கெட்டுப்போகாதாஎன்றனன்.

ஆத்மஞானி:—மூடசிரோமணியே! வயதிற் பெரியோராயும் மயிர் நரைத்தும் இருக்கும் ஆண்பெண்களைப் பெரியோர் என்று மதித்து அவர்கள் கூறும் மூடவார்த்தையை நம்பிக்கெடுவது நன்றல்ல. இவ்வாக்கியங்கள் வேதாகம புராணங்களில் கிடையாது. ஒருவர் மூடமனதால் ஒருகாரியம் நடத்த, அக்காரியம் தன்கர்மானுசாரம் முடிய, தான்செய்த சாமர்த்தியத்தால் முடிந்ததென்று திருப்தி செய்துக்கொள்வர். அதையும் நீ ஒப்பிநடத்துகிறாய். அஃதுவருமாறு. (35) வருஷம் முதலில் வயலிலேருழுவோர் வரும் லாபங்கள், வயலிற்பொன்னேர். (36) கட்டியோட்டி கடலை பச்சரிசி, கட்டிவெல்லம் கப்பறைதேங்காய் (37) உடைத்தாலுழவர்களூரில் நின்று, உடையுணவேற்று வுறுதியாய் வாழ்வர், (38) என்று செய்யு மேனவாயர்கள் பொன்றின பயிரைப்போய் பார்த்தழுவர், (39) ஈசானியமூலையிலீன்ற கதிர்களை இழுத்தறுத்திட்டா லிடருறாதென்பர், (40) பொங்கலிட்டு போட்டால் பலியும் பொழிவாய் விளையும் பொன்வயலென்பர், இப்படிசெய்தால் ஒருநாளும் கெடாமல் கைகூடிவருமென்று தாங்களும் செய்து பிறரையும் செய்யும்படி தூண்டுவோர், (41) பயிர்கதிர் சாவிகள் பண்பாய் நேர்ந்தால் பண்ணியபாபம் பலித்ததென்பர்.

தேகஞானி:—கு கவிகள்பாடும் குருசாமிகளே! கவிக்குளபுத்தி கவிவாணர்க்குளவோ. குரங்குகள் தங்கள் மரபினர் செய்யும் காரியத்தைவிடாமல் செய்கிறவழக்கத்தை யுணர்ந்திலர் போலும் காண்கிறது. முன்னோர்வழக்கத்தை விடாமல் அனுஷ்டிக்கிற வானரர்க்குளபுத்தி வாலில்லா நரர்களுக்கிருக்கொணாதோ?

ஆத்மஞானி:—முதியோர் நடத்திக்காட்டும் நல்லொழுக்கத்தை "தொடர்ந்து பிடிமர்க்கடப்போல் தொட்டதுபற்றுநில்" என்றபடி கைப்பற்றவேண்டியது தான். நின்மரபினர் புத்தியீனத்தை யுணர்ந்த பெரியோர் சாமியொருவரே யுண்டென்றும் மற்றவையில்லை யென்றும் சொன்னால் ஒப்பாமல் (42) சாமியொருவரே யுண்டென்போரைச் சாமிகளறியாசண்டிநீ என்பர். (43) சகுண நிர்க்குணஞ்சார்ந்த ரூபியை சாரார் என்றும் சலனமடைவர், என்று முதியோர் சொன்னால் அவர்களை நின்மரபினர் பரிஹாசஞ்செய்து

உலகிலுள்ள வயதிற் சிறந்த பெரிய பெண்களும் புருஷாளும் சேர்ந்து ஏற்படுத்தி பூசைசெய்யும் அடியிற்கூறும் சாமிகளை நீங்கள் அறியாமல் மதியீனமாய்த் தடுப்பது சரியல்லவென்று தடுக்கின்றனர். உலகர் சாமிகள் வருமாறு (44) குட்டிச்சாமி, குண்டுகற்சாமி, குழவிசேதாரி, குறளிகாட்டேரி, (45) செங்கற்சாமி, செடிநாச்சியராம், சங்கிலிவீரன், சடையன், சாமுண்டி, (46) சாணிபிள்ளையார், சப்பைமூக்கிரிசி, சாத்தான்குட்டி, சக்கிலிமாடன், (47) மதுரைவீரன், மாப்பிள்ளைமுத்தன், மண்டைகாப்பன், மாயாண்டியிருளன் (48) கொண்டிதோப்பண்ணன், கொள்ளிபிசாசு, கொண்டைமுனியன், கோமளசின்னான், (49) ஒண்டிவீரன், ஒரடியண்ணன், ஒண்டும் கன்னி ஒருமுகமாரி (50) தண்டுமாரி, தடியன்சாமி, பெண்ணைப்பிடிக்கும் பேயண்ணன்மார் (51) ஆணைப்பிடிக்கும் ஆகாசகன்னி, ஆனையெய்க்கும் ஆத்தாள்முத்தி, (52) துணியைப்பிடுங்கும் துரட்டுமுள்சாமி, துணித்தகற்குவியிற்றாங்குஞ்சாமி, (53) இத்தனைசாமிக ளிவரறிந்திலரோ, இத்தரையோர்கள் இன்னுஞ்சொல்வர் (54) கண்ணிற்பார்க்கும் கற்சாமிகளைக் கண்டிலாவறிஞர் கடையரே யென்பர்.

(இன்னும் வரும்.)

பு· ஐயராப்பிள்ளை·

ஆத்மநேசன்.

கமலாவதி·

(108-ம் பக்கத்தொடர்ச்சி.)

இப்படியேசிலகாலஞ் சென்றபின்னர் தெய்வகடாட்சத்தால் இவர்கட்கு கருப்பந்தாங்கியது. உடனே (கருப்பாதானம்) கருப்பந்தரிக்கும் கிரியைசெய்து முடித்தனர். இரண்டாம் மாதத்தில் (புஞ்சவனம்) ஆண்மகவுக்கென்று நாசியில் மருந்து பிழியுங் கிரியைசெய்தனர். நான்காம் மாதத்தில் (சீமந்தம்) மூன்றிடத்து விளர்ப்புள்ளபன்றி முள்ளினால் தலைமயிரைவகிர்ந்து செய்யுங் கிரியைசெய்தனர். அவ்வரசியாரது கொங்கைகளிரண்டும் விம்மி முனைகள் பாக்கினது நிறம்போல் கறுத்து சிவப்பேறி தலைகளை நிமிர்த்து நின்றன; எட்டாம் மாதத்தில் (விண்டுபலி) நான்காம்மாதத்தைப்போலவே செய்து முடித்தனர். முலைமுனைகள் இரண்டும் நாவற்பழம்போல் கறுப்புநிறமேறி தங்கள் தலைகளைத் தாழ்த்தாமல் ஈஸ்வரனைநோக்கி ஜபிப்பதுபோல் நிற்க, ஈஸ்வரனும் அவைகளுக்கிரங்கி அவைகளை அமுதத்தால் நிறைத்தனர்; அவைகளும் இதுகண்டு இமை கொட்டாது காக்குஞ் சேவகரைப்போல் நின்றன. அவ்வரசிக்கு இனிய சுவையுள்ள பதார்த்தங்கள்மேல் விருப்பூமுண்டது, முறையே கொணர்ந்துதரவுண்டு திருப்தியாயினர்.

இரண்டு இடைகளும் பாரத்தைத் தாங்கமுடியாதனவாகி காலிலணிந்திருக்கும் சிலம்பிடத்தில் முறையிட அவைகள்கூவி மற்றோரிடத்தில் முறையிடுவதுபோலச் சத்திக்கும் காலணிகளையுடைய அவ்வரசிக்குப் பிரசவநாட்களுஞ் சேர்ந்து பிரசவிக்குஞ் சமயத்து வாய்த்த வருத்தங்களைத் தாங்காதவளாகியினியொருபோதும் நாயகனண்டை யெவ்விதத்தும் நாம் சாவகாசஞ்

செய்யப்படாது.இனிசந்நியாசங்கொள்வதேதகுதியெனத்தீர்மானித்திருந்த
சமயத்து இளஞ்சூரியனைப்போலும் கிரணங்கள் படிந்த பெண்பகவு உதித்த
து; சூரியனும் வெட்கமுற்று எதிரிலிருந்த மேகத்திரளில்போய் ஒளித்திருந்
தான். அவ்வூர் முழுவது பொன்மயமாய் விளங்கியது; அச்சமயத்தில் கோப
மாயிருந்தவர் சிரித்தனர், விசனமுள்ளோருக்குச் சந்தோஷந்தானேவந்தது,
பயந்திருந்தவர்கள் தைரியம்பெற்றனர், யாவும் நலமாய்த்தோன்றின.

அரசியும் மூர்ச்சை தீர்ந்து இளஞ்சூரியனாகிய குழந்தையைக்கண்டதும்
தாமரையாகிய முகம் மலர்ந்து, தாதியர் செய்வனயாவுஞ்செய்து தீர்ந்ததி
னால் அக்குழந்தையைத் தன்னிருகரங்களால் தாவியேந்தி யணைத்து உச்சி
மோந்து விரதந்தீர்ந்தாள்.

பிரசவநேரத்தில் வருத்தத்தால் வாடி தாம் தீர்மானித்த எண்ணத்தை
ஞாபகங்கொண்டு "பிரசவ வைராக்கியம், பிரசங்கவைராக்கியம், மயானவை
ராக்கியம்" இவை தம்முள் இதுதானோ பிரசவவைராக்கியம் எனத்தனக்குள்
ளே யெண்ணி புன்னகைகொண்டாள், குழவியை நலுநீராட்டி மெல்லியகம்ப
ளிப் போர்வையொடு எப்போதுஞ் சூடாயிருக்கும்படி செய்துவைத்திருந்
தனர். அவ்வரசியாளது தனங்களும் தந்தவமுடிந்ததென்று அமுதமாரிபெய்
தது. இவ்வளவு காரியங்கட்கும் காரணராயிருந்த கடவுளாரை யேத்தாது
மேத்தி குழந்தையைத் தாய் தூக்கித்தர வாங்கியணைத்து முத்தமிட்ட அரச
னைநோக்கி; நாயகா! நந்தவம் இன்றேமுடிந்தது. இனி யிக்குழந்தைக்குப்
பாற்றாதியொருவள் முன்கோபியா யில்லாமலும் பிணியற்றவளும் சாந்தகுண
முள்ளவளும், எப்புலன்களும் கேடின்றி சுகதேகியா யிருப்பவளும் நல்லபரு
வமுள்ளவளுமாகியஒருத்தியைதேடிக்கொணரவல்லீரோவென அவ்வரசனும்
மனமகிழ்ந்து, தந்நாயகியின் தாதியரையழைத்து நீவிர்சென்று நங்குழந்தை
க்குப் பாற்றாதி வேண்டுமாகையால் மிகவும்பருத்த திரேகமும் மந்தபுத்தியும்
நெடுந்தூக்கமும் சோம்பலிவை யாவுமில்லாதவளும், சாந்தகுணமுள்ளவ
ளாய் மிரளுங் குணமில்லாதவளும் சுதேகியும் அழகுபொருந்தி குறுகிய தன
ங்களுள்ளவளும், நல்லவடிவுடையவளும், விசனம்படிந்த முகக்குறியில்லாத
வளும், சுத்தமுள்ளவளும் பிணியற்றவளுமாய் பந்நலங்களும் அமைந்த வொ
ருத்தியைக்கொணர்கவென ஆக்கியாபித்தான்.

தாதியர் அவ்வரசனது கட்டளையைச் சிரமேற்கொண்டாராகி, வேத
வல்லியென்னும் ஒருநற்குல ஸ்திரீயை அழைத்துவந்தனர்.

பின்னர் அக்குழவிக்கு வேளைதவறாமல் வெந்நீராட்டி, பொன்னே!
கண்ணே! தேனே! அமுதமே! கனிரசமே! எனப்பலவாறாகக் கொஞ்சுவ
தோடு காண்பார் பலரும் அவ்விளஞ்சூரியனைத் தங்கள் கண்களினால் உண்
பதுபோலநோக்கி முத்தமிடுவர்.

குழந்தைக்குச்சிறிதுசிறிதாக அதிகரித்துக் கொடுத்தார் எனினும் குழ
ந்தை அழும்போதெல்லாம் கொடாமல் விதிப்படி மூன்றுமாதகாலம் வரை
பகற்காலத்தில் ஆறுமுறையும் இராக்காலத்தில் மூன்றுமுறையும் பாலூண்பித்

தார்கள். பின்னும் அக்குழவியை அசுத்தமான அறையிலிருந்து நீக்கிச் சுத்த அறைக்குக் கொண்டுபோதலாகிய உத்தாபனஞ்செய்து சோதிடரைக்கொண்டுசாதகமெழுதுவித்து கமலாவதி யென்று நாமஞ்சூட்டுவித்தனர். நான்காம் மாதத்தில் குழந்தையை யெடுத்துக் கோயிலுக்குப் போவதாகிய சந்திமிதிப்பித்தனர். ஆறும்மாதத்தில் அன்னப்பிராசனக்கிரியை செய்தனர். பதின்மூன்றும்மாதம் மயிர்க்கழித்தலாகிய சவுளச்கிரியை செய்தனர். ஐந்தாம் வருடத்தில் உபநயனக்கிரியை முதலிய வீறுகச்செய்து முடித்தனர்.

பின்னரவ்வரசன் தங்குருவாகிய அமுர்தவாக்யம் முத்துவைரஸ்வாமிகளுக்கு திருவோலையனுப்பி வரவிட்டு எதிர்கொண் டழைத்து சகலோபசாரங்களுஞ்செய்து ஆசனத்தமர்த்தி கமலாவதியைக் காண்பிக்கஅவருங்கண்டு மகிழ்ந்து அக்குழவிக்கு ஆசிகூறி, அக்குழவியினது அன்றலர்ந்த செந்தாமரைப்போன்ற முகத்தையும், இரண்டு சிறிய வண்டுகள் மதுவுண்ணும் பாவனையாய்ப்படர்ந்து பரந்தமார்பையும், திரண்டெழுந்து இரண்டு முழங்காலைத் தீண்டும்படி யானையின் துதிக்கைபோன்ற நீண்ட கைகளையும், அழகாய்க் குவிந்துள்ள வயிற்றினிடத்து ஆழ்ந்துள்ள கொப்பூழையும், பாதவரிசைகளையும், பிரதான நாற்புலன்களது சித்திரக்கூடங்களைத் தாங்கும் ஒரேதூணாகிய கழுத்தினது மயக்கந்தரும் பிரகாசத்தையும் உற்றுநோக்கி மிகவுஞ் சந்தோஷித்து இச்செல்வி சகலகுணசம்பன்னளா யிருப்பாளெனச் சொல்லினர். பின்னுமவ்வேந்தன் தம்மாசிரியரை வணங்கி இச்செல்விக்கு தங்கள் முகத்தேகல்விபயிற்றித்தருதல் வேண்டுமென வேண்டிநிற்க ஆசிரியரிசைந்தவராய் நல்லதினமொன்று குறித்து அன்றை வித்தியாப்பியாசத்தினமெனக் கொண்டாடினர். அவ்வூரிலிருந்த வொவ்வொருவர் வீட்டிலும் உற்சவம் போன்றேயிருந்தது. கமலாவதி கல்வியில் மெத்தவும் ஜாக்கிரதையுள்ளவளாய் பலரும் அதிசயிக்கும்படியாக அதிகசீக்கிரம் சீக்கிரம் படித்துவந்தாள். இதுகாரணம் பற்றி தனது தந்தையாராகிய சவுந்தரகேசரிக்கும் தாயாராகிய காஞ்சனாதேவியாருக்கும் உண்டாய அன்பு இவ்வளவென்று அளவிடத்தக்கதல்ல. என்றினும் தாங்கள் "ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக்கேட்டதாய்." என்பதாக மெத்த அன்புகொண்டிருக்கும் ஆனந்தத்தை "—நெஞ்சாரவே துதித்தல்—மைந்தர்தமை நெஞ்சில்—" என்பதாக வெளிவிடாதவர்களாய் உள்ளத்துள்ளே மகிழ்ந்தார்கள்.

ஒருநாள் கமலாவதியின் தாய் தன்னை யருகில் அழைத்து அணைத்து முத்தமிட்டுச் சொல்லுவாள், கமலாவதி! யின்று நம்மரண்மனை நோக்கி வந்திருக்கும் உனது அத்தையார் நீவாசிக்கும் வாசகத்தைக் கேட்க மெத்தவும் ஆவலாயிருக்கின்றமையால் உன்பாடத்தை வாசிப்பாயெனக் கேட்க!

கமலாவதி—என்னருமை பெற்றாய்! அத்தையார் கேட்க விரும்பும்பட்சத்தில் நான் மெத்தவும் சந்தோஷப்படுகிறேன். எனது பழைய பாடங்களில் ஒன்றை வாசிக்கட்டுமா அல்லது நாளைக்குரியபாடத்தை வாசிக்கட்டுமா?

தாயார்—என்னருங்குழந்தாய் எந்தபாடமாயினுஞ்சரி. உன் அத்தை

யாருக்கு இனிப்பாகவும் அவசரமின்றி நிறுத்தியும், உரத்தசத்தமாகவும் வாசிப்பாய் அப்படி வாசிப்பதுதான் அழகாகும்.

கமலாவதி—அத்தையே என்துவாசகபுத்தகத்தில் பார்த்தீர்களா ?. எவ்வளவு நேர்த்தியான படங்களிருக்கின்றது. நான் என்புத்தகத்தை அழுக்கு செய்யாதபடி ஜாக்கிரதையாக வைத்திருக்கிறதினால் இப்புத்தகம் மெத்தவும் சுத்தமாக விருக்கின்றது. இந்தபுறம் பார்த்தீர்களா? என்புத்தகத்தை யாரோஎடுத்துக் கொள்ளுவார்கள் என்பது தந்தையருடைய எண்ணமாக்கும். ஆகையால், தங்கத்தகடொன்றில் என்பெயரைச் செதுக்கச்செய்து இப்புத்தகத்தின் மேற்புறத்தில் தந்தையார் பதிப்பித்துக் கொடுத்தார். அத்தையே! பின்னுமொன்று இப்புத்தகத்தின் முற்பக்கத்தில், தங்கநிறமுள்ள எழுத்துக்கள் பதிப்பித்திருக்கின்றனவே இதை எப்படி பதிப்பித் திருப்பார்கள் மென்பதைநினைக்க எனக்கு எவ்வாற்றானும் விளங்கவில்லை; இதென்னபொன்னைக் காய்ச்சி இதின்பேரில் வார்த்திருப்பார்களா ? என்பதுந் தெரியவில்லை.

(தொடரும்)

பா. முனிஸ்வாமிபிள்ளை.

உலகில் மேம்பாடடைந்தார் யார் ?

எழிலும் புகழும் பெற்ற நேயர்காள்! இங்ஙனம் யாம் சொன்ன மாத்திரத்தில் பலரும் பலவாறாக விடையளிப்பா ராயினும் சிலர் யாதோ தர்க்கிக்க எழுந்துள்ளா ரெனவும் எழக்கூடும். ஆயினுமங்ஙனங் கொள்ளல் தகா? தானத்திலும் நிதானம் பெரிதெனு முதியோ ருரையை அங்கீகரித்தல் நலம், யாங்கூறுவது எந்நிலத்து மக்கள் தம்பாஷையை வளர்க்கின்றாரோ அந்நிலத்து மக்களே பூமுகத்துயர்ந்துளா ரென்பது. இவ்வுண்மை ஆங்கிலேயர் பிராஞ்சியர் ஜர்மானியர்களிடத்தும் அமெரிக்கர் ஜப்பானியரிடத்தும் பிரத்தியக்ஷமாம். இவர்களே பூ முகத்தி லுயர்ந்த நிலையுடையாரென யாவரானும் மதிக்கப்படுபவர்கள்.

இவர்கள் தம்பாஷையை யாது செய்கின்றார்கள்? ஆதிமுதல் இடையராமலே வளர்த்து வருகின்றார்கள். எப்படி வளர்த்துவருகின்றார்கள்? தத்தம் பாஷையிலுள்ள நூல்களைக் கிரமமாக ஆராய்ந்தும், காலந்தோறும் பயன்படத்தக்க நூல்களை இயற்றியும், தம் பாஷையிலில்லாத நூற்களை பிற பாஷையினின்றும் மொழி பெயர்த்தும், பலவகை வித்தியாசாலைகளை இடங்கள்தோறும் ஸ்தாபித்தும், கல்விகற்க பொருளில்லாத ஏழைப்பிள்ளைகளைப் பொருள் உதவிசெய்து கற்பித்தும், பலதுறைப்பட்ட சாஸ்திரங்களிற் கூறப்பட்ட பொருள்களை நாடியாராய்ந்தும் பொறியுணர்ச்சிக் கெட்டாத பொருள்களை ஆய்ந்து சித்தாந்தஞ் செய்தற்கும் ஏதேனும் சஞ்சிகைகள் புதிதாய்ப் புறப்பட்டால் தேனென மொய்த்துக்கொள்வதும் முன்னர் ஆராயப்படாத பொருள்களை ஆராய்தற்கும் வேண்டும் இடம் பொருளேவல் எல்லாந்தந்துதவியும் வளர்த்து வருவது உள்ளங்கை நெல்லிக்கனி போலாம்.

இவ்வாறுலகத்துத் தத்தம் பாஷைகளை வளர்த்தலால் அவரெல்லாம் பலதுறைப்பட்ட கல்வி கேள்வியுடையராய் விளங்குகின்றார்கள். கல்வியால் ஆன்ற அறிவும், அறிவாற்பொருளும்,பொருளால் வலிமையும், வலிமையால் விளக்கமும், விளக்கத்தால்

உயர்வுமுடையராயினர்கள். ஆதலால் தம் பாஷையைவளர்ப்பார்களே உயர்ந்தாராவர் என்பது வெள்ளிடைமலையாம். இதுவன்றே தத்தம் பாஷையை வளர்க்கச்செய்யுமுயற்சி, தத்தந் தேயத்தை உயர் விக்கச்செய்யு முயற்சியாம். அம்முயற்சியினுஞ் சிறந்த தேசாபிமானமும் பேரறமும் பிறிதொன் றில்லையாம்.

நந்தமிழ்பாஷை அபிவிருத்தியுற்றிருந்த ஞான்று நம்முன்னோரிருந்த நிலையென்ன? நந்தமிழ் மொழிவளர்ப்பாரின்றிக் குன்றிய இக்காலத்து நமது நிலையென்ன! தமிழ்வளர்ந்துன்னத தசையிலிருந்த ஞான்று நம்முன்னோர் நிலை நமது நிலையிலும் பன்னூறுமடங் குயர்ந்ததன்றோ. அவருண்டதும் தமதுணவே அவருடுத்ததும் தமதாடையே அவர் வாழ்ந்ததும் தமது மாளிகையே அவரணிந்ததும் தமது பொன்னே அவரேறியது தம் திரதமே அவர் பூசியதும் தமது வாசமே அவரிருந்ததும் தமது நாடே அவராண்டதும் தமதரசே அவர் சேவித்ததும் தமதரசே அவரோடியதுந் தங்கடலே அவரோட்டியதும் தம்மாக்கலமே அவர் வழிபட்டதும் தந்தெய்வமே அவர் கும்பிட்டதும் தங்குருவே அவர் பேசியதும் தம் பாஷையே அவர் ஓதியதும் தமது நூலே.

அஞ்ஞான்று நம்முன்னோர் தமது நாட்டிற் பிறர் வந்திரப்பதும் ஒதுங்குவதுமன்றிப் பிறர் நாட்டிற்சென்றிரந்து மொதுங்கியுமறியார். வாணிபத்தின் பொருட்டும் வெற்றியின் பொருட்டும் கடலோடுவதன்றி இந்நாளில் சிங்கப்பூர் பெனங்கு நெட்டால் மோரீஸ் முதலிய தீவாந்தரங்களுக்கு வாளா வயிறுவளர்க்கு நிமித்தம் கடலோடுவது போற் கடலோடியறியார் பிறரை ஏவல் கொண்டதன்றிப் பிறர்க்கு ஏவல்பூண்டறியார் அவர் தமது கைவினைப்பொருளைப் பிறர் வந்து கொள்வதன்றிப் பிறர்கைத்தொழிற் பொருளை தாங் கொள்ளலுமறியார்.

“வேயாமாடமும் வியன்கல விருக்கையு, மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர் தடுக்கும், பயன்ற வறியாப் பாவனரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள், கலந்திருந் துறையு மிலங்குநால் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும், பூவும் புகையு மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகரவீதியும், பட்டினு மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகரிருக்கையும், ஆரமு மகிலுந் தூசும் துகிலு
மாசறு முத்து மணியும் பொன்னும், அருங்கல வெறுக்கையோ டளந்துகடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும், பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூலவீதியும், காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர், பாசவர் வாசவர் பன்னிண விலைஞரோ
டோசநற் செறிந்த வூன்மலி யிருக்கையும், கஞ்ச காரருஞ் செம்புசெய் குநரும்
மரங் கொறச்சருவ கருங்கைக் கொல்லரும், கண்ணுள் வினைஞரு மண்ணீட்டாளரும்
பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும், துன்ன காரருந் தோலின் றுன்னரும்
கிழியினுங்கிடையினுந்தொழில்பலபெருக்கிப்பழுதில்செய்வினைப்பால்கெழுமாக்களும்
குழலினும் யாழினுங் குரல்முத லேழும், வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டு [அ
றும்பெறன்மரபிற்பெரும்பாணிருக்கையுஞ், சிறுகுருங் கைவினைப் பிறர்வினையாளரோ
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும், கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வணிகர், மாட மறுகு மறையோ ரிருக்கையும்
வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை, யாயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகைதெரிந்தபன்முறையிருக்கையும், திருமணிகுயிற்றுநர்சிறந்தகொள்கையோ
டணிவளை போழுந ரகன்பெரு வீதியுஞ், சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர், காவற் கணிகைய ராடற் கூத்தியர்

பூவிலை மடைந்தய ரேவர் சிலதியர், பயிருழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும், கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
கொடுந்தே ரூருநர் கடுங்கண் மறவர்.

எனவரும் காவிரிப்பூம் பட்டினத்துச் சிறப்புரைத்த சிலப்பதிகார செய்யுளால் விளங்கும்.

நம்முன்னோர் இங்ஙன முயர்ந்திருந்து அக்காலத்தில் அவர் வைதிகநெறிக்குரிய நூல்களை மாத்திரமன்று உலகியனெறிக்குரிய நூல்களையுமொருங்கே கற்றுவந்தனர், பிராமணர் வைதீக நூல்களும் க்ஷத்திரிய குலத்தினர் யுத்த சாஸ்திரங்களும் அறநூல்களும் வைசியர் அர்த்த சாஸ்திரங்களும் சூத்திரர் காருக கம்மிய முதலிய கைத்தொழிற்குரிய நூல்களும் விசேஷமாகக் கற்றும் கற்றதைச்செய்தும் உலகிய நெறிதளரா வண்ணம் பாதுகாத்துவந்தனர். அதனாலவர்கள் சுவாதீனர்களாய் நம்மிலும் உயர்வுடையர்களாய் விளக்கினார்கள். பிற்றை நாட்பாண்டியர் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் அலக்ஷியஞ் செய்யத்தலைப்பட்டனர். அன்று தொட்டது தமிழ்நாட்டிற்குவிபரீதகாலம். அதன்பின்னரே உட்பகைகளாலும் வேற்றரசர் படையெடுப்பாலும் தமிழரசு வீழ்ந்தொழிவதாயிற்று. நம்முன்னோர் நாகரீகம் அவர் காலத்துக்கேயேற்றது காலந்தோறுங் காலவியல்பு மாறுதலின், மாறுபட்ட இக்காலத்துக்கு அக்காலத்து நாகரீகமெல்லாம் பொருந்த வேண்டுமென்பது ஆவசியகமன்று. பொருந்துவதைக் கொள்ளலும் பொருந்தாததைத் தள்ளலும் பொருந்தத்தக்க புதியனவற்றைத் தழுவுதலும் வேண்டும்.

ஆதலால் பழைய நூல்களுள்ளும் வேண்டுவனவற்றைக் கற்றும் வேண்டாதனவற்றைத் தள்ளியும் இந்நாளுக்கேற்ற புதிய நூல்களைச்செய்தும் பிறபாஷைகளிலுள்ள நூல்களை மொழிபெயர்த்தும் முன்னுளிலிருந்தருகிய பயன்படு நூல்களைத் தேடிப்பிரகடனஞ்செய்தும் வித்தியாசாலைகளை இடங்கடோறும்வாணிகநோக்கியன்றி வித்தியாபிவிருத்தி நோக்கித்தாபனம் பண்ணியும், கைவினை நூல்களும் கைவினைப் பயிற்சியும் தமிழிலே பயிற்றும் வித்தியாசாலைகளை நாட்டியும் சோதிட சாஸ்திரம் ரசாயன சாஸ்திரம் பிரகிருதி சாஸ்திர முதலியன தமிழிலே பயிலத்தக்க வித்தியாசாலைகளையும் அதற்குவேண்டும் யந்திரக்கூடங்களையும் ஸ்தாபித்தும் தமிழ்பத்திரிகைகளை யாதரித்தும், தமிழ்பாஷையை வாளர்த்தாலன்றி தமிழராகிய நாம் உயர்வதும் வுயர்ந்தவருள் வைத் தெண்ணப்படுவதும் எக்காலத்துமில்லை!.

இதனை தமிழ் நாட்டிற்பிறந்து விளங்கும் பெருந்தகைகள் சிந்திக்குமாறு அவரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆன்றோர்க்கடிமை.

திருக்குறள்.

பிறனில் விழையாமை.

காமமயக்கத்தால் அந்நியனுடையமனைவியை இச்சியாதிருத்தல் என்பதுபொருள். இஃது ஒழுக்கமுடைமையின் பின் அமைக்கப்பட்ட தென்னையோ வெனில் ஒழுக்கமுள்ளவர்கள்தான் அந்நியனுடைய மனைவியை இச்சிக்கமாட்டாரென்னுந்துணிபு பற்றியென அறிக. பிறர்பொருளை யிச்சித்தலே பெருங்குற்றமாகக் கொள்ளப்படுகின்றதாகலின் அதினும் பிறனுக்கருமையாகி உலகவியல் நடத்துவதற்கேதுவாயுள்ள கருவியாகிய அவனது மனைவியை விரும்புதல் சொல்லுதற்கொண்ணா பெருங்குற்றமென்பது சொல்லாமலே விளங்குமன்றோ? இத்தகைய பெருங்குற்றத்திற்கு சமயங்களில் அவ்விருவரும் (ஆணும் பெண்ணும்) உட்படுகின்றனர். ஏனெனில் சமயங்களில் பெண் சம்மதமின்றேல் அயலான் விரும்புதற்கிடமிராது. பெண்களுக்கு இவ்விஷய மிருக்கப்ப

டாதென்பதைப்பற்றி முன்னமேவாழ்க்கைத்துணை நலம் என்னும் அதிகாரத்தில் கற்பு என்னும் பகுதியின் கீழ் விரிக்கப்பட்டுள்ளது ஆகவே இப்போது பேசப்புகுவது ஆண்களைப்பற்றியே யெனக்கொள்க பிறர் மனையாளை விரும்புவன் பேதையென்றும் அவனிடத்து அறம்பொருள் இல்லையென்றுங் குறிப்பாயுணர்த்த நாயனார்,

"பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்." என்றார். பிறன் பொருளாள் என்பது கவனிக்கத்தக்கது ஒருவனுக்கு அவனுடையமனைவி உடைமையாகின்றாள். ஒருவனுக்கு உடைமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறாள் என்பது எல்லாமதங்களிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்துமதத்தில் பிராமணர் விவாககாலத்தில் தெய்வவாணியில் சொல்லும் மந்திரங்களைச் சிறிது கவனித்தால் உண்மை விளங்கும். கிறிஸ்து மதத்திலும் அப்படியே உண்டு. "தேவனால் சேர்க்கப்பட்டவர்களை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்றும் கிறிஸ்தவ போதகர் விவாககாலத்திலே வாசிக்கக் கேட்டிருக்கின்றோம். இன்னும் அக்னிமுன்பாகவும் பெரியோர் சுற்றத்தார் முன்பாகவும் பெண்ணின் தாய் தந்தையரால் அப்பெண் மணமகனுக்குத் தத்தஞ் செய்யப்படுகிறாள். விரிக்கில் பெருகும். ஆகவே எல்லாவிஷயத்திலும் கணவனுக்கு உடைமையாக வுள்ளமனைவியை மற்றொருவனிச்சித்தால் அறம் பொருள் அவனிடத்து நில்லா எனக்காட்டினர். இங்குபேதை என்பதை இன்னும் வற்புறுத்த நாயனார்,

"அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரில் பேதையா ரில்." என்றார் பிறனுடைய மனைவியை இச்சித்து நடப்பவனைப்போன்ற பாவி இல்லை யென்பது இக்குறளின் பொருளாகும் முன் குறளால் அறம் பொருளிவ்விரண்டும் பிறன்மனையை இச்சிப்பவனிடத் தில்லையெனக் காட்டி பின்னும் அப்பேதை அனுபவிப்பதாகக் கருதிபோகும் இன்பமும் அச்சத்தால் அவனுக்கில்லை யென்பதாகக்காட்ட "பேதையாரில்" என்றார் அவ்வாறு இச்சிக்கும் கீழ்மகனிடத்து அச்சமேயன்றி இன்பமே இல்லை என்பதை நாலடியார்.

"புக்க விடத் தச்சம் போதரும் போதச்சம்
துய்க்குமிடத் தச்சம் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலு மச்சம் தருமா லெவன் கொலோ
வுட்கான் பிறனில் புகல்."

என்பதால் அறிக. நாயனார் பேதை எனக்கூறிய கீழ் மகனை நாலடியார்;

அச்சம் பெரிதாலதற் கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்காற் கோக்கொலையால்—நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன் றாரம்
நம்பற்க நாணுடை யார்.

என்பதால் நாணமற்றவரென்று குறிப்பாகவும் முன்கூறிய செய்யுளால் உட்கானென்று இகழ்ந்துகூறியு மிருக்கின்றனர். இந்நாலடி செய்யுளில் நம்பற்க என்னுஞ் சொல் கவனிக்கத்தக்கதே. விரும்பாதிருக்கக்கடவர் என்றும் பொருள்தர நம்பற்க என்னும்சொல் அமைக்கப்பட்டதெனினும் அதில் இன்னொரு கருத்து மடங்கியிருக்கிறது தங்கள் தங்கள் இஷ்ட தெய்வங்கள் முன்பாகவும் பெரியோர் முன்பாகவும் சுற்றத்தார் முன்பாகவும் தாய் தந்தையர் உத்தரவின் பேரிலும் தனக்கு வாய்த்த புருஷனை சுகத்திலும் துக்கத்திலும் நேசித்து, அவன் கருத்துக்கேற்க நன்னடக்கைக்யைப்பற்றி இல்லறம் நன்குமுடிவுபெற துணையாய் தன் மரணபரியந்தம் அவனுக்கே உரிமையாயிருப்பேன் என்று சத்தியவாக்கு கொடுத்த ஓர்பெண் அத்தகைய கணவனை மோசஞ்செய்து

தன்வாக்கை நிறைவேற்றாமல் இன்னொருவனை இச்சித்து வருவாளேயானால் அவ்வாறு இச்சிக்கப் பட்டவனுக்கே அவள் உரிமையா யிருப்பள் என்று நம்ப இடமுண்டா? இல்லை இல்லை. தன் சொந்தகணவனை மோசஞ்செய்து அந்நியனை விரும்பினது போலவே, அவள் இவனையும் மோசஞ்செய்து இன்னொருவனைத் தேடுவள். ஆகையால் அறிவுள்ளோர் பிறன் மனையாளை தன்னுடையவளாக நம்பவே மாட்டார்கள் என்று காட்டவும் "நம்பற்க" என்றும் பதம் அமைக்கப்பட்டது போலும். இதனை அறியாது பிறன் மனைவியை இச்சிப்பவர்க ளெல்லாம் மோசஞ் செய்யப்பட்டு அதனால் பைத்தியம் பிடித்து வாழ் நாளைப் போக்கிக்கொண் டிருப்பதாக நாம் கேள்விப்பட் டிருக்கிறோமல்லவா இன்னும் பிறன் மனையாளை இச்சிப்பவர், நடக்கும் பிணமாவர் என்று காட்ட,

"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரின்
தீமை புரிந்தொழுகு வார்." என்றார். இத்தீச்செயல் செய்வோர் தான் எடுத்த பிறவியின் பயனாகிய அறம் பொருளின்பம் வீடாகிய புருஷார்த்தங்களை இப்பிறவியில் அடைவதை இத்தீச்செயல் தடுக்கின்றதாகலின் அவர்கள் பயனற்றவர்களா யிருக்கின்றபடியால் உயிரோடு கூடினும் இறந்தவர்களாகவே கொள்ளப்படுகின்றனர். நண்பர் கவனிக்க. செல்வமிகுதியாலும் உலக வீண்புகழாலும் நிறைந்தவர்கள் தாங்கள் இத்தீமை செய்தால் யாரும் கேட்கமாட்டார்க ளென்றும் தமது அபரிதமான செல்வம் இதனாலழியாது என்றும் கர்வங்கொண்டு காமத்திற்கே அடிமைகளாய் பிறன் மனையாளைப் பலாத்காரமாகவாவது நயவஞ்சகமாகவாவது மற்றெவ்விதமாகவாவது சேரும் கீழ்மக்களின் செருக்கை யடக்க நாயனார்.

"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்." என்றார் எவ்வளவு பெருமையுடைய ரேனும் பிறன் மனைவியை இச்சித்தால் பெருமையிழந்து சிறுமையடைவர் என்பது பொருளாகும். இதற்கு இந்திரன் அகலிகையை விரும்பி சிறுமை அடைந்ததே போந்த சாட்சியாகும். செல்வங் கல்வி முதலியனவும் இத்தீச செயலாலழியு மென்பதை நல்வழி,

"நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்
கொண்ட கருவழிக்குங் கொள்கைபோல்—ஒண்டொடீ
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலம் அயல்
மாதர்மேல் வைப்பார் மனம்."

என்பது நன்குணர்த்துகின்றது. பின்னும் தான்செய்வது அவ்வளவு தீமைதருவதல்லவென பின்வருவதை யறியாது பிறன் மனையாளை இச்சிப்பவன் தனக்கும் தன் குடிக்கும் அழியாப்பழியைத் தேடிக் கொள்ளுகிறான் என்றுணர்த்த,

"எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி." என்றார். இல்லிறப்பா னென்பது பிறன் மனையாளிடத்து வரம்புகடந்து நடப்பான் எனப்பொருள் தரும். இன்னும் இதனை விவரிக்க

"பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்." என்றார். பிறன் மனைவியை இச்சிப்பவன் தனது இருமைப் பயன்களையும் இழந்து விடுகிறானென இவ்விரண்டு குறளாலுங் காட்டினார். இதனை நாலடியார் "காணிற் குடிப்பழியாம்" என்பதாலும்,

"அறம்பொருள் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்"

என்பதாலும் நன்கறியலாம். எப்பொருளும் உண்மையி லழிகிறதில்லை, அறிவதாகக் காணப்பட்டாலும் அழியாமல் வேறொன்றாக மாறுகிறதென்னும் சாத்திரசித்தாந்தத்திற்கேற்க இங்கேயும் பிறன்மனையாளை விரும்பும் மிருகங்களாகிய கீழ்மக்கள் நாலடியார் கூறியபடி அறம்பொருள் முதலிய நான்கும் தங்களிடத்து அழியப்பெற்றாலும் அவை அழிகிறதில்லை. அவை தங்களிடத்து பகை பழி பாவம் அச்சமாகமாறுகின்றன. ஆகவே தங்களிடத்தும் அறம்பொருள் முதலியவும் இருக்கின்றன ஆனால் மாறுபட்டிருக்கின்றன எனத் தங்கள் மனத்தை தாங்களே திடஞ்செய்து கொண்டு அக்கேவலசெய்கையையே புரிந்து அதிலே மெய்ம்மறந்து மிருகங்கட்கும் சேவலமாய் நடக்கின்றனர்போலும். அந்தோ என்னபரிதாபம்! படிப்பிற் பாண்டித்ய முடையவர்களாகமேலுக்குக் கொள்ளப்படுவோரும் உருத்ராக்கம் துளசிமாலை முதலியன பூணும்வைராக்ய சைவ வைஷ்ணவ வேஷதாரிகளும், மற்றும் மதத்தில் வைராக்ய முடையவர்களாகக் காட்டிக்கொண்டு, ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய் போன்றவரும், ஜீவகாருண்யமில்லா மிலேச்சரும் தங்கள் மனைவியர் அழகில் இலக்குமிபோலவும், கற்பில் அருந்ததிபோலவுமிருந்தும் அவர்களோடிருந்து இல்லறம் நன்கு நடத்தாது மிருகங்களைப் போல் தாரசம்மியமில்லாதும், மனவுறுதியில்லாதும் அந்நியர் மனைவியரை இச்சித்து அடைந்த இழிவும் பெற்ற கேடு கெட்ட கதியும் நாம்பார்த்தும் கேட்டும், வாசித்துமில்லையா? இருந்தும் அவைகளை உணராது கேவலமாம் இச்சையைப் பூர்த்திசெய்து கொள்ள பிறன்மனைவியைத் தேடித்திரிவது ஏனோ? இதைப் பற்றியன்றோ நாலடியார் அவர்களை பார்த்து பின் வரும் கேள்வி கேட்கின்றார்

"காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை செய்யுங்கா லச்சமாம்—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
வின்ப மெனக்கெனைத்தாற் கூறு"

இதற்கு அக்கீழ்மக்களின் விடை என்னமோ? இதுவரை நாயனார் பிறன்மனையாளை விரும்புவோரிடத்துண்டாகும் இழிவுகளைக் காட்டி, அப்படி இச்சிக்காது ஒழுக்கத்தைக் கடைபிடித்தொழுகும் மேன்மக்களது குணத்தை உணர்த்துவான் வேண்டி

"அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்" என்றார்.

பிறன்மனைவியை இச்சியாது நடப்பவனே இல்வாழ்வானென்னும் பெயர்க்குரியவன் என்பது இதன் பொருளாம். ஆகவே பிறன்மனைவியை இச்சித்தொழுகும் பேதை உலக தோற்றத்திற்கு இல்வாழ்வானாகக் காணப்பட்டபோதிலும், இல்வாழ்வானென்னும் பெயர்க்குரியவனல்லன். நாயனார் இல்வாழ்க்கை என்னுமதிகாரத்திற் கூறிய இலட்சணங்களொன்று மிவனிடத்து பொருந்தியிராவென்பது துணிபு. காமத்திற்கே அடிமையாகி தன் சுகத்தையும் தனத்தையும், தேகத்தையும் பிறர்மனையாரிடத்தும் வேசிகளிடத்தும் தத்தஞ்செய்து தனது சொந்த நாயகி தன்னிடத்து அதிருப்தியையும் வெறுப்பையுங் கொள்ள இவனே செய்துகொள்ளுகின்றபடியால், ஷை நாயகியும் இயல்பாயுண்டாகும் வெறுப்பினால், கூடுமான காலம் சகித்து கணவனுக்கு நன்மதிபுகட்டியும் அவன் கேளாதிருக்கக்கண்டு தனக்குரிய நாணமுதலியவைகளை யிழந்து பரபுருஷகமனஞ் செய்ய நேரிடுகின்றது இக்குற்றத்திற்கு மனைவியும்குற்றவாளியேயெனினும்குற்றஞ் செய்வதற்குநாயகன் முழுகாரணமாயிருந்தபடியால் இந்த சந்தர்ப்பத்தில் நாயகனே முழுகுற்றவாளி யாகின்றான். எல்லா குற்றவாளியிடத்து கம்பீரநடைமுதலியன இல்லாததைக் கண்டிருக்கிறோம் அப்படியே இக்குற்றவாளியிடத்தும் கம்பீரநடை இல்லையென உறுதியாகச் சொல்லலாம். இதைப்பற்றியன்றோ நாயனார்,

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்

னேறுபோற் பீடு நடை" என்று முன்னமே தெரிவித்திருக்கிறார். ஆகவே பிறன்மனையாளை இச்சிக்கும் ஒவ்வொருவனும் தன் நாயகிக்கும் பரபுருஷ கமனஞ் செய்ய அதிகாரம் கொடுப்பவனாகின்றான். அப்படியானால் தன் நாயகியை மற்றொருவன் கைப்பற்ற விட்டிருக்கும் இவனும் ஓர் ஆண்மகனா? பேடியிலும் பேடியல்லவோ! ஒருவன் பேடியாயில்லாது ஆண்மகனா யிருக்க விரும்பினால் அவன் பிறன்மனையாளை இச்சியாதிருக்கடவன். இன்னும் பிறன்தாரம் இச்சியா மேன்மகனது குணத்தை விவரிக்க,

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்

கறனொன்றோ வான்ற வொழுக்கு" என்றார். பிறன்மனையாளை நோக்காதிருப்பதே மனிதர்க்கு சிறந்த ஒழுக்கமும் தருமமுமாகும். நோக்காத என்னும் பதம் ஓர்கால் மாம்ச இயல்பினால் காமந் தோன்றினும், பெரியோர்கள் அதைவெளிக்காட்டாது அடக்கி தங்களை ஆண்டு கொள்வர் என்னும் கருத்தை யுள்ளடக்கி யிருக்கிறது போலும். இதனை நாலடியார்

"பரவா வெளிப்படா பல்லோர்கட் டங்கா
வுரவோர்கட் காமநோ யோஒ கொடிதே
விரவாரு ளுறுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும்."

என்பதால் அறிகின்றோம் காமம் ஓர்கால் தோன்றினும் பெரியோர் வெளியே (பிறர்மனைவியரிடத்து வரம்புகடந்த நடத்தை வழியாய்) காட்டார்; பெருக்கார். தமக்குள்ளேயே விசாரணையின் பலத்தாலும் சற்சகவாச நேர்மையாலும் அடக்குவர் என்பது இச்செய்யுளின் பொருளாகும். ஆகவே வெளிக்குகாட்டி திரியும் மாக்கள் சிறியரென்பது பெறப்பெற்றும். இக்குறளில் பேராண்மை என்று சொல்லியது எதற்கோவென்னில் வெளிப்பகைவரை அடக்குவதிலும் உட்பகையாம் ஆறில் மூலமாயுள்ள காமத்தை அடக்குதலே பெருமை எனக் காட்டுதற்கே. காமம்அடக்கற்கரிதுஎன்பதை,

"ஊருளொழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்."

என்பதாலும் மற்றவை யானுமறிக. உலகத்துள்ள எல்லா நன்மைகளையு மடைதற்குரியவர்கள் யாரெனின் பிறர் மனைவியரை யிச்சியாதவரே, இக்கருத்தடக்கி நாயனார்,

"நலக்குரியா ரரெனி னாமநீர் வைப்பிற்

பிறர்க்குரியார் டோடோயா தார்." என்றார். உலகத்தில் மனிதனடையவேண்டியவற்றுள் சிரேஷ்டமானது பிறப்பறுக்கும் ஞானமே ஆகலின் அத்தகையஞானத்தையும் அடையும் வழிகளில் ஒன்று பிறர்மனை நயவாமையாகும். இதனைபட்டணத்தார் "பேய் போற்றிரிந்து......உண்மை ஞானங் கண்டவரே" என்னுஞ் செய்யுளில் "நன்மங்கையரைத் தாய்போற் கருதி" என்று சொல்லி யிருப்பதால் உணரலாம். கடைசியாக பிறர்மனை நயத்தலின் கேவலத்தை யுணர்த்த,

"அறன் வரையானல்ல செயினும் பிறன் வரையாள்

பெண்மை நயவாமை நன்று." என்றார் தர்மத்தைவிட்டு பாவத்தையே செய்பவனாயிருந்தாலுங்கூட பிறர்மனை யிச்சிக்கும் இப்பாவத்தை ஒருவன் செய்யாதிருக்கக்கட

வன் என்பது பொருள். ஐயோ இது பாவத்திலும் கேடு கெட்டதா யிருக்கின்றதே இதைக் கையாடுபவனும் பாவியிலும் பாவியாகவல்லோ ஆகிறான். மானிட ஜன்மம் எடுத்தது இவ்வரிய பட்டத்தை சம்பாதித்துக்கொள்ளத்தானோ? அல்லது இப்பிறப்பில் மிருகத்தைப்போல் இதனைக்கையாடி மறுபிறப்பில் பல்லோரும் பழிக்க ஆலியாகப் பிறத்தற்குத்தானோ இவ்வரிய ஜனனம் எடுத்தது? இவர்கள் தங்களைச் சுத்த ஞானிகளாகப் பாவித்துக் கொள்ளுகிறார்கள் போலும் எப்படியெனில் சுத்த ஞானிக்கு உலகத்துள்ள பொருட்களுக்குள் பேத மில்லாததுபோல் இக்கீழ்மகனிடத்தும் தன்தாரம்பிறன் தாரம் என்னும் பேதம் இல்லைபோலும். ஞானிக்கு அசத்தில் விருப்பும் சத்தில் வெறுப்பும் இல்லையென்றால் இக்கீழ்மகனாகிய காமஞானிக்கு அழிவில் விருப்புமாத்திர மிருப்பது என்ன ஞாயமோ? அதிலும் பிறன் மனையாளிடத்து மாத்திரம் விருப்பிருப்பது என்ன அதீதபக்குவமோ நண்பர் தெரிந்து கொள்வார்கள் விரிக்கிற் பெருகும்.

1. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்

2. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்

3. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்

4. எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்

5. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி

6. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்

7. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்

8. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு

9. நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோ யார்

10 அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

கோ. மு.
சென்னை.

ஜாதிகள்

(90 - ம் பக்கத்தொடர்ச்சி.)

ஒரு சூத்திரன் நற்கதியடைய வேண்டுமென கோருவானாகில், பிராமணருக்கு வழியஞ்செய்து அவர்களால் விடப்பட்ட எச்சிலை உண்டால் அவனுடைய சரீரம் சகலபாவங்களி லிருந்தும் நீங்கி பரிசுத்தப்படுவான்.

பூர்வத்தில் ஒரு பிராமணனுடைய சரீரத்தைத் தொட்டுப் பிரமாணம் செய்கிறதுண்டு, இப்பொழுதும் அப்படி செய்து நம்பிக்கை செய்து வருகிறார்கள்.

இந்து சமய சகல சடங்குகளும் இயற்றப்படவேண்டியது பிராமணர்மட்டுக்குமே
யாம். சூத்திரருக்குக் கிடையாது. ஒருபிராமணனுக்குத் தானங் கொடுப்பது அளவிலா
சுகிர்தமுண்டென்று சாஸ்திரங்களில் கூறியிருக்கிறது. இக்காலத்தில்பிராமணனுக்கு
போஜனம் செய்விப்பது இந்துக்களில் மஹாபெரிய சுகிர்தகாரியமென வெண்ணப்
பட்டிருக்கின்றது, இந்துக்களின் சகலவைபவங்களிலும், பிராமணருக்குத்தானமளிக்
கப்படுகிறது. ஒரு எளியவன் இரண்டு மூன்று பிராமணருக்கு விருந்தளிக்கிறான். ஒரு
பணக்காரன் நூறுபேருக்குச் சமாராதனை செய்கிறான். எல்லாத் திருவிழாக்களிலும்
விவாகமுதலாகியவைகளிலும் செய்யவேண்டிய பெரியகாரிய மென்னவெனில்,—

பிராமணருக்கு விருந்தளிப்பதும், தட்சணைகள் கொடுத்தனுப்புவதேயாம். ஒரு
சூத்திரன் தான் எடுத்தகாரியத்தில் சித்திபெற வேண்டுமென்று கோருவானாகில் ஓர்
சுகிர்தமான காரியம் செய்யவேண்டும். அதாவது இரண்டு மூன்று பிராமணனுக்கு
விருந்தளிக்கவேண்டும். ஒருவன் விசேஷமாய் பிராமணருக்கு விருந்தளித்துக்கொ
ண்டு வருவானாகில் அவனைபார்த்து அண்டை அயலார் ஆ! ஆ! நீயே பாக்கியவான்!
இத்தனை பிராமணருக்கு விருந்தளிக்க கூடுமானவனா யிருக்கின்றாய் யென்கிறார்கள்.
ஒரு பொறாமைக்காரன் சிலவேளை யவனைப்பார்த்து தூஷிக்கிறது எப்படி என்றால்,
அவனுக்குவெகு பணமிருக்கிறது. ஆனால் ஒருகாசளவில் செலவழிக்க மனம் வருகிற
தில்லை, பிராமணருக்கு போஜனம் கொடுப்பதில்லை, அவர்கள் பாதபூஜை செய்கிறது
மில்லை யென்பதேயாம். மரணகாலத்தில் பிராமணருக்குப் பூதானம், கோதானம்,
கிரிஹதானம், அளித்தால், அளித்தவன் செய்த பாபங்களெல்லாம் நிவாரணமாகி
மறு உலகத்தில் அழியாதபேரின்ப வாழ்வை பெறலாமென சாஸ்திரங்களில் எடுத்துச்
சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒரு பிராமணனுடைய கால்விரல்கள் தோய்ந்த ஜலத்தைப் பானம்செய்தால்
மஹா சுகிர்தமென்று யோசிக்கப்படுகிறது.

சிலர் இலட்சம் பிராஹமணனுடைய பாததூசு சேர்க்கப் பிரயாசைப் படுகிறார்
கள். அதெப்படியெனில் ஒரு பெரிய பிராஹ்மண சமாராதனை ஆகிற வீட்டுவாயற்படி
க்கு முன்பாக ஒரு வஸ்திரத்தை பரப்பிவைக்கிறது, அதன்மேல் பிராஹமணர் நடந்து
போனபின்பு அவர்கள் பாதங்கள்பட்டு உதிர்ந்த தூசுகளை உதறி எடுத்து வைத்துக்கொ
ள்கிறது. இந்தப் பாதரேணுக்களை உட்கொண்டபேர் அற்புதமான சுகமடைவதாக நம்
பப்படுகிறது. பரிதாபம்.

(தொடர்ச்சி.)

சி. ம. இ. மூர்த்தி.

கேள்வி.

குறள்.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

சீர்வாய்ந்த சப்த சமுத்திரங்களாலும் குளிர்ச்சிபொருந்திய நவதானிய பண்ணை
களாலும், முத்தருக்கள் நிறைந்த சோலைகளாலும், வானளாவிய சிகரிகளாலுஞ் சூழப்
பட்டிரானின்ற இம்மேதினியின் கண் சர்வகலைவாரிதியாகிய பரமபிதாவின் கிருபா
நோக்கத்தால் ஜனித்த ஜீவராசிகட்குள் மேம்பட்டது மானிடப்பிறவியே. இம்மானி
டப் பிறவிக்குத் தக்கவாறு சன்மார்க்கத்தை யனுசரித்து அதன்வாயிலாக மேலோர்தம்
மாட்சிமைக்குப் பங்காளிகளாவதற்குச் சிறந்தகருவி கல்வியேயன்றி வேறல்ல. இக்
கல்வியை யாமெவ்வளவு தான் வாய்க்கப்பெறினும் "கேள்விமுயல்" என்னும்நீதிமொ

ழிக்குத் தக்கவாறு நல்லாசிரியரை யடுத்து அவர்களால் கற்பிக்கப்படும் சிறந்த சொற் பயன்களை நன்குணர்தலேயக் கல்விக்கழகு.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து.

இக்கேள்வி யென்பதை முன்னிட்டன்றோ சாத்திர விற்பன்னர்களாகிய வித்வ மணிகள் ஆங்காங்கு பிரசங்கமாரி பொழிந்து கல்விபயிலும் இளைஞர்கட்கு, ஈன்ற தாய் தன்மகவுக்கு முலையமுதூட்டி வளர்க்கும் பான்மையைப் போல் நீதிசாரமாகிய அமுதை யூட்டுகின்றனர்? ஆ! ஆ! இவ்வளவு சீர்த்திவாய்ந்த சாரத்தையன்றோ பருகி நம்மின் கல்வியென்னும் தேகத்தை வளர்க்கவேண்டும்? இங்ஙனமின்றி வீணேசகல கலைகளையுங் கற்கலாமென முயன்று ஒவ்வொருநூலிலும் கால், அரைக்கால், வீசம் படித்து யாதொன்றிலும் தேர்ச்சியடையா திருத்தல் விவேகமன்று. ஒருநூலையேனும் முற்றமுணர்தலே கல்விக்கழகு. அற்றேல்கிஞ்சித்து கற்றவித்தையும்பலனற்றபோம்.

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்து வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

ஐம்பொறிகளி லொன்றாகிய செவிக்கு இன்பத்தை யூட்டுமாறு, சப்த சுரங்கட் கூடிய கீதங்களையும், நவீனவாத்திய கருவிகளின் ஓசைகளையும், அன்பர்களின் இன் சொற்களையும் கேட்க எவ்வளவு ஆர்வமுற்றவரா யிருக்கின்றனமோ? அதற்கு மேலாக மேதாவியர்களின் போதனைகளையும், ஆசிரியரின் சிறந்த கற்பனைகளையும் நாடோறுங் கேட்க நனி ஆசையுடைத்தா யிருத்தலே கல்வி விர்த்தியின் முதற்குறியாம். இப்படிக் கின்றி "அரைக்கல்வி முழுமொட்டை" யென்பதைப்போல் சிறிது கற்றுக்கொண்ட மாத்திரத்தில்,

கற்றறிந்தார் கண்ட தடக்க மறியாதார்
பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார்—தெற்ற
அறைகல் லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்தளும்ப வில்.

என்பதை மறந்துத் தங்களைத் தாமே புகழ்ந்து திரிதல் கல்விக்கும், கற்றவர்க்கும் அழகன்று. மீண்டும் தங்களை வெல்லவல்லவர் இவணில்லையென வீணே களித்தலும் அசேதனமே.

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டாம்
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங்—காக்கும்
சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல்.

ஈண்டு மேற்கூறியவண்ணம் மாணவர்கள் நல்லாசிரியரை யடுத்து தங்கட் கல் வியை மென்மேலும் வளரச்செய்வாரென்பது எமது துணிபு. அங்ஙனமின்றி

கற்பூரப்பாத்தி கட்டிக் கஸ்தூரி யெருப்போட்டுக் கமழ்நீர்பாய்ச்சிப்
பொற்பூர வுள்ளியினை விதைத்தாலு மதன்குணத்தைப் பொருந்தக் காட்டுஞ்
சொற்பேதை யருக்கறிவிங்கினிதாக வருமெனவே சொல்லி னாலு
நற்போதம் வாராதாங் கவர்குணமே மேலாக நடக்குந்தானே.

என்னும் நீதிமொழிக்குப் பலியாகி "இல்லிக்குடமா டெருமை செய்யரி யன்னர்
கடை மாணுக்கர்" என்னும நன்னூலார் மொழியை மாலையாக அணியாது, "அன்னம்
மாவே யனைவர் தலைமாணுக்கர்" என்னும் மகுடத்தைப்பூண்டு நீடூழிவாழ விரும்பிய
தன்வழிச் செல்வதே கற்பின் பொற்பாம். சுபம்!

த. தாமஸ்.

உலகம் சத்தா? அசத்தா?

(114-ம் பக்கத் தொடர்ச்சி.)

காரியமான கடம் அசத்தேனுங் காரணமாய் மண்ணேனுஞ் சத்தென்பாமே யெ
னின் கூறுதும். எதுகாரணமெனப் படுமோ அது காரியப்படவே வேண்டும். ஆடை
க்கு நூல்காரணமேனும் பஞ்சினுக் கந்நூல் காரியமாகும். அங்ஙனமே கடத்தக்குமண்
காரணமேனும் அம்மண்ணும் தன் காரணமாய வணுக்களுக்குக் காரியமாம். காரிய
மென்பதனைத்து மெக்காலத்து மின்றென்றிது காறுங் கூறிப்போந்தா மாகலின் அம்
மண்ணும் அசத்தெனப் படுமெனக.

காரியமாகவேனுங் காரணமாகவேனு மூள்ளதியாதோ அஃதே யுண்மையாயுள்
ளது. அஃதே சத்தெனின் காரியமாகவேனுங் காரணமாகவேனு மிருந்ததியாதோ
அஃது காரியமாகவேனும் காரணமாகவேனும் இருக்கவேண்டும். காரியமெனின்முக்
காலத்து மின்றென்ற துணியப்பட்டதேனக. யாது காரணமெனப் படுமோ வஃது
காரணமாகவே யிராது. வேறொன்றினுக்குக் காரியப்பட்டு அசத்தென்னும் பெயரெய்
துகின்றது. காரியகாரணம் சங்கிலித்தொடர்பே போன்று முடிவின்றி நிற்குமெனின்
அஃதுங்காரிய காரணத்நினடங்கி அசத்தெனப்படுமெனக.

பரமாணு அழிவின்றி யெஞ்ஞான்று நின்று காரியப்பட்டு மீண்டு மழிந்துகாரண
மாகவேயிருக்கும். அஃது காரியப்படுவதின்று. எஞ்ஞான்றுங் காரணமாகவே இருப்ப
தொன்றுமாதலின் அனைத்துங் காரியப்பட்டு, அஃதொன்றுங் காரியப்படா தெனக்
கோடற் கெனைத்துமே நியாயம் புலப்படுவதன்று அஃதே காரணமாமெனின் ஓர் பர
மாணுவினோடு வேறோர் பரமாணுவிரவி அஃது வேறோர் பரமாணுவினோடு விரவி
யிங்ஙனமே காரியப்பட்டு மகத்தாகவேண்டும். முன்னர் ஓர் அணுவினோடு வேறோ
ரணுவிரவுமாயின. ஓர் பால் விரவி ஏனையமூன்று பாலும் விரவாதிருக்க வேண்டும்.
திருஷ்டாந்தமாக;— ஒரெலுமிச்சங்கனியோடு வேறோர் கனி விரவுமாயின் ஓர் பால்
விரவி ஏனைய விரவாதிருக்கக் கண்கூடாகக்கண்டா மன்றே.இவ்வாறே யோர் பொரு
ளோடு வேறொன்று விரவுங்கால் ஓர்பால் விரவி ஏனையபால் விரவா. விரவிய வழி
விரவாதனவு நிகழ்தலின் முன்பின் நடு முதலியன நிகழ்வது ஒருதலையாமெனக. எத்
உருப்பினிகழ்வதோ அஃது காரணமாகாமே காரியமேயாம். காரணமாக நிகழ்ந்தன
வனைத்தும் காரியமாக இஃதொன்றுங் காரியப்படாதென்பது உத்திக் கொத்ததன்று.
யாது எவ்வாறு நிகழினும் காரணமொன்றுளதாக வேண்டுமெனின் அஃதேன் காரி
யப்படாது? உலகத்தோற்றரவுக்கு காரணம் வேண்டற் பாற்றெனின் ஆண்டைக்காரண
ணமாய வணுநிலை பெறுடைத்தாயினன்றோ ஈண்டையுலகமென்பதுசத்தாம். காரியகா
ரணமுடிவின்றிச் சேரலின் அனவத்தாதோட மெய்தும். ஆகலின் முடிவின்கண் எத்
துணையணுவு மிருப்பதாகக் கூறலெவ்வாற்றானு மியையாதெனக.

கண்ணுக்கும் மனதக்கும் விடயமானவணு, அசத்தாய் கழியினுங் கண்ணுக்கும்
மனதுக்கு மெட்டா வதிநுட்பவணு உண்மையாயுளதே லஃது கண்கூடாமா? அனு
மானவளவை யானறிதற்பாற்றோ? காண்டலளவை யானறிவதன்று. அனுமானவளவை
யானறிதற்பாற்றெனின், கண்கூடான சத்தைக்கொண்டு கண்கூடின்மையானசத்தை

யறிவது அனுமானத்திற் கிலக்கணமாகலின், இவ்விலக்கணத்தான் புகைசத்து, நெருப்புசத்து. புகை கண்கூடு, நெருப்பு அங்ஙனமல்லாதது. கண்கூடான புகையான தங்ஙனமல்லாத நெருப்பை யுணர்வது தக்க திருட்டாந்தமாம். இது தாட்டாந்தத்துக்கொவ்வாது. கண்ணுக்கும் மனதுக்கும் விடயமானவணு, அசத்தெனத் துணியப்பட்டது. கண்ணுக்கும் மனதுக்கு மெட்டாத அணுசத்தெனச் சொல்லப்படுகின்றது. கண்கூடாம்புகை சத்தாயிருப்பது போன்று தாட்டாந்தத்தும் கண்ணுர்க்கும் மனதுக்கும் விடயமான அணுசத்தாகவே யிருக்கவேண்டும். அங்ஙனமன்றி அசத்தாகப் போந்தமையின் திருட்டாந்தா பாசமாகின்றது. கண்ணுக்கும் மனதுக்கும் விடயமான அணுச்சத்தாயிருப்பதாயின் கண்கூடானவிச்சத்தைக் கொண்டு அங்ஙனமன்மையான கண்ணுக்கும் மனதுக்குமெட்டாத வணுச் சத்தாயிருப்பதென்று அனுமானிக்கலாம். புகையானது ஆராய்ந்துழிப் பனியாய்ப்போந்த விடத்துப்புகை அசத்தாய்ப் போமன்றோ. அற்றேல் நெருப்பு எங்ஙனம் சத்தாம்? அனுமானம்; தோற்றம் எதார்த்தமென் றிருதிறத்த. இவற்றுள் தோற்றவனுமானத்தால் பொருள் சித்திக்கும். புகை எதார்த்த அனுமானம். புகையைப்போல் தோற்றி ஆராய்ச்சியின் கண் அஃதின்றி நின்ற பனி தோற்றவனுமானமாம். எதார்த்தவனுமானப் புகையான் நெருப்பு சித்திக்குமன்றி தோற்றவனுமானப்பனியாற் சித்தித்தற்பாலதா? அங்ஙனமே கண்ணுர்க்கும் மனதுக்கும் விடயப்படும் அசத்தான தோற்றவனு மானத்தான் கண்ணுக்கும் மனதுக்கு மெட்டாதவணு சித்தித்தற்பாலதன்று.

(தொடரும்.) டி. வி. கே.

தர்மாபுரி.

கத்தோலிக்குக் கிறிஸ்தவர்களுளதி முக்கியமாக வுபாசிக்கப்படும் பெரிய வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இம்மூன்றுதினங்களும் ஷை தர்மாபுரிதாலூக்காவைச் சார்ந்த கோவிலூரில் இவ்வருடம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இம்மூன்று இரவுகளிலும் அலங்கிர்தமான தேர்கள் சிங்காரித்து, கொண்டுவரப்பட்டன. பலவிடங்களினின்று மாயிரங்கணக்கான ஜனங்கள் நெருங்கினர். ஷை தர்மாபுரிதாலூக்கா சொரக்காய்ப்பேட்டை ஸ்தலாதினரும், கோலார்சாம்யன்ரீவ்ஸ் தங்கவயல் கன்ராக்டரும், ஷை சாம்யனில்ஸ்தாபித்திருக்கும் அர்ச்:அமலோற்பவலூர்துநாயகியின் கமலோற்பவக் காருண்யதியான பஜனையின் உதவித் தலைவருமாகிய எஸ். எ. அற்புதம்பிள்ளையவர்கள் பெரும்பிரயாசையால் முடிந்த அலங்கிர்தமான திருத்தேருங் கொண்டுவரப்பட்டது. இம்மூன்று இரவுகளிலும் ஷை அ. லூ. நா. க. கா. இ. பஜனையடியார்கள் தேர்சுற்றுப்பிரகாரத்தோடு பக்திசாதுரியமானதும், மனதையுருக்குமினிய இராகங்கள் கூடியது மானதோத்திரப்பாக்கள் பாடிவந்தனர். ஷை சபையராபீஷ்டப்படி இச்சபையின் உபாத்தியாயராகிய (அமிர்தகவி) ம-௱-௱-ஸ்ரீ, ஆர். எ. ஆரோக்கியசாமிப் பிள்ளையவர்களா லியற்றி ஷை ஸ்ரீமான் எஸ். எ. அற்புதம்பிள்ளையவர்கள் பொருளுதவியாற் பிரசுரித்த "வேண்டற்பாமாலை." "மங்களமாலை" எனும் அரிய பாசுரங்கள் ஞாயிற்றுகிழமையிரவு எழுந்தருளப்பெற்ற தேர் சுற்றுப்பிரகாரத்துக்குப் பின்னர் ஷை பஜனைகுழாங்களால் அரங்கேற்றஞ் செய்யப் பட்டது. இப்பஜனையோர் யாவரும் அவ்விடத்துக்கு வராவிடினும் இப்பஜனையின் உபந்யாசகர்த்தர் ம-௱-௱-ஸ்ரீ ய. பால்குரோஸ்நாயுடு, உபாத்தியாயர் ஷை ஆர். எ. ஆரோக்கியசாமிப்பிள்ளை, முதலெஜண்டு ம-௱-௱-ஸ்ரீ ஜே. டேவிற்பிள்ளை, உதவித்தலைவர்ஷை ஸ்ரீமான் எஸ். எ. அற்புதம்பிள்ளை பிட்லர் கனம் எ. ஞானப்பிரகாஸம்பிள்ளை, மற்றுஞ்சில பிள்ளைகளுமே யிருந்து இப்பஜனையை நடத்தினார்களென்றாலும், யாவரும் புகழத்தக்க விதமாகவே யிருந்தது. இவர்களுடைய நல்லூக்கத்திற்கு கடவுள் முன்னிற்பாரென்பதற்கு சந்தேகமின்று. இத்திருவிழா மிகவுஞ் சிறப்பாய் நடந்தேறும்படி முக்கி

யமான பிரயாசை யெடுத்துக்கொண்ட ஸ்ரீமான் கண்டாக்டர் எஸ். எ. அற்புதம்பிள்ளை யவர்கட்கும், ஸ்ரீமான், கண்ட்ராக்டர் எஸ். துரைசாமிப்பிள்ளை யவர்கட்கும், ஸ்ரீமான் கண்ட்ராக்டர் எஸ். கிராசனம்பிள்ளை யவர்கட்கும், ஸ்ரீமான். ஜே. டேவிற்பிள்ளை யவர்கட்கும் சர்வேஸன் நீண்ட ஆயுளும், ஐசுவரியமுங் கொடுத்து இவர்களின்னு மேலாக வித்திருவிழாவை யினிக்கொண்டாடும்படி கிருபை செய்வாராக, மற்றும் புண்யசீலர்களித்தகைய சத்விஷயங்களில் பிரவேசித்தல் நன்மைக் கிடமாகும். ஸ்ரீமான் எஸ். எ, அற்புதம்பிள்ளையவர்கள் அன்பும் ஆதரவு மெம்போன்றயாவருச்கு மவசியம். ஷை பஜனையின் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமான். எப். சி. தம்புசாமிபிள்ளையவர்கள் முதல், தண்டலீருகவுள்ள சகலரும் நீடுவாழ்ந்து அப்பஜனையும் தழைக்க வேண்டாநின்றும்.

உப பத்திராதிபர்.

மதுபானனுக்குக்கிடைக்கும் பிரதிபலன்.

(143-ம் பக்கத்தொடர்ச்சி.)

தான் கெடுவதுடன் மைந்தர் மனையாட்டியையும் கெடுத்து விடுகிறான். குழந்தையுமதிக்க இடமில்லாது நேரிடுகிறது. பணச்செலவுக்கு முதலாளியாவு மிருக்கிறான். இவன் துர்க்காரியத்தினால் ஈனஸ்திதிக்குவந்த இவனது பெண்டுபிள்ளைகளைக்கண்டநல்லார் அல்லது சற்குணத்தார் அக்குடியனைத் தக்கவிதமாய் தருவித்து வேண்டிய சொற்சாதுரியமாய், பொன்னைப்போல் குடியினால் இக்கெதி யிதுவரையில் அனுபவித்தாய் இனிமேல் குடிக்கவேண்டாம் என்று புத்திசொல்லும்போது:—பார்ப்பவர். கேட்பவர் யாவரும் அதிசயப்படும்படியாய் வெகு புத்திசாலியைப்போல் தலைகுனிந்து அமைந்து இனியொருக்காலம் மதுவை கனவிலும், நினைக்கமாட்டேன் என்று எவ்விதமான பிரமாணிக்கத்தையும் செய்து சகலரும் மெச்சவும் ஆனந்திக்கவும் அந்நேரத்தில் மாத்திரம் நடித்து மறுக்ஷணத்திலேயே சகலத்தையுமு் பற்றமறந்து குலை குளி[illegible]குடித்து வெறித்து திரிவான். தாய்தந்தை சகோதிரர் சகோதிரி இனஜன[illegible]ந்துக்களுக்கும், பெரியோர்களுக்கும் விரோதியாகிறான். மதியிழந்து பேதையாய் உடுக்க வஸ்திரமும் உண்ண ஆகாரமுமின்றி. இருக்கவிடமுமின்றி எந்தமூலையிலும் நீற்க நிழலற்று தெருவில் நின்று தியங்குவான். தண்டசியாய் உலகத்திலவனைப் போல குடியருக்கன்றி மற்றயாவருக்கும் பொல்லாதவனாகுவதன்றி சாக்ஷாத்பகவனுக்கும் கொடியசண்டாளனாகி தன்னாத்துமாவையும் கெடுத்து நரகதண்டனைக்காளாகி விடுகிறான்.

(இன்னும் வரும்.)

எப். சி. டி.

விநோதகூற்று.

(144-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஓ அம்மணீ அடியேனுக்கு உமது திருவருட் கடாக்ஷித்தருளுகவென வேண்டிய கலியுக நாரதரைநோக்கி ஏ-கலியுக காலாகோல மஹாஜால பிரபுவே! கேளாய் கிரேதா, திரேதா, துவாபரவென்னும் திரியுகங்களிலு மிருந்த நாரதமாமுனி யிப்போது ஸ்வர்க்கத்திலே மஹாசம்பிரமத்துடன் வீற்றிருக்கிறார். நீ அவ்விடம் செல்லொணாது, ஓரிடத்தில் இரண்டு நாரதர்களிருப்பதுக் கூடாமை, ஆதலாலுனக்கொருபாயம் சொல்லுகின்றோம். அங்ஙனஞ் செய்வையே லுன்கோரிக்கை யினிதேறுமுடியும் அலைந்தாவது, ஷை சுவர்க்கத்தின் மறுதிசையில் சையமினி எனுமோர் நகரமுளது அதனை அரசாக்ஷிபுரிந்துவரு மதிபதியின்பால் உன்னைக்குறித்து சிபார்ஸ்செய்கின்றனம் அங்கு சென்றாலுனக்கு யாதொன்குறைவிராது எனவும், அம்மணீ! அந்நகரமெத்திசையுளதோ அவண்செல்லுந் தடமியாதோ! அன்புற்றுரைத்தல் வேண்டுமெனவும், அப்பா! இப்பூதலத்திற்கு மதர்க்கு மேறக்குறைய எண்பதாயிரங் காதவழியுளது. அதற்கடுத்தாப்

போல் தாமிசபைரம், சௌகசம், கிரௌஞ்சம், மஹாசிவம், சால்பலி, ரௌரவம், குட்மளம், பூதிமிதருகம், காலசூத்திரகம், சங்காதம், லோகதந்தம், சம்விஷம், சம்பிரதாபனம், மஹாநரகம், சகோளம், சஞ்சீவனம் மஹாபதம், ஆவித்தியம், அந்ததாமிசிரம், கும்பீபாகம், அசிபத்திரவன்முதலான எண்பத்துநான்கு நகரங்களிருக்கின்றன. அதிலுன் குணத்திற்கேற்ற நகரங்கிடைக்கும் இதன்றியுமங்கு உலக்கை சித்தன், குலசித்தன் பாசசித்தன், அக்கினிசித்தன், அரணைசித்தன, கொள்ளிவாய்சித்தன், கே.ரேசித்தன், கொடியவனைசித்தன், அகோரசித்தன், ஆலசித்தன், சரிகைசித்தன், பாதாள சித்தன், அறெகொடுசித்தன், வெட்டுஞ்சித்தன் முதலியன எண்ணரிய சித்தர்களும் வழிபரிதாரி வாயாடிதாரி, கள்ளகும்பிடுதாரி. புறம்பேசுங்கூட்டம், பொய்யுரைதாரி, வஞ்சகதாரி, இச்சகதாரி, இனைதுரோகிதாரி, திருட்டு கடிதமெழுதும் துன்மார்க்கதாரி பிறர்மனையை இச்சித்து பங்கமடையும் பாத்தாரி பழுக்கருடித்தலைந்தும் சற்சங்கத்தை யழிக்க வகைதேடும் அறிவிலாமாறி ஊரார், உறவார், உள்நாட்டோர், இனஜனபந்துயாவருக்குமுதவாப் பரமலோபீ, ஊரைக்குழப்பு மூலூத்தன எச்சில் கள்ளுக்கு இச்சகமாய் யீனரைப்புகழும் சண்டாளன் உண்டவீட்டிலே இரண்டகம் செய்யுஞ் சண்டாள சீமான் கற்றறிமேழை யென்னுந் துட்டகுண மிலேச்சன் வாயாடி, வீண்செருவி தற்பெருமை தற்புகழ்ச்சிக்கொண்டவன் கட்டுசோற்றுப் பூனையைப்போலாங்காங்கு திரிந்து கலகமூட்டுமோறி பிறர்சினேகமில்லாப்பேர்களுன்பேதைமுதலிய பிச்சையென்றோரைப் போவென்றோரும், குருவின் மீதிற் குறைகூறுவோரும், ஆலய தர்மகைங்கரிய சொத்தை யபகரித்தோரும், மதாபிமானம், ஜாதியபிமானமில்லாரும் தான்செய்வதின்னதென்றறியாத போலியரும், வீண்வாதம், வைராக்கியம் வீணுடம்பர தாண்டவமாடும் திருகூத்தாடிகளும் அன்னையை யடித்தோரும், தந்தையை துறிச்சினந்துபேசியோரும், சுபநாள் தியநாள்களைக் கணியாது அநாகரீக மதுபானவழிபடுவோரும் வாங்கியகடனைக் கொடாது, வல்லாண்மைபேசும் வம்பருமாகிய திரள் திரளானபுண்ணியசிலர்களும் வாழும் மாகூழைமைபொருந்திய திவ்விய (நகரம்) அவ்விடத்தேகுவையேல்சதாகவிப் பெய்திவாழ்குவையெனலும்? (இன்னும் வரும்.)

வேங்கைவீரன்.

கடிதங்கள்.

படோடோபக்காரரென்று பட்டாங்கடித்த
பாமரருக்குப் படிப்பினையாக;

"யாரையா படோடோபக்காரன்"?

என்றெழுதியவரின் விஷயம் அதிகநீண்டதாகையால் அடுத்த வியாஸனில் பிரசுரிப்பாம். (பத்—ர்.)

சில தினங்களுக்கு முன் ஓர் கிறிஸ்தவ ஜெபக்கூட்டத்திற்கு போக நேரிட்டது. அது இறந்துபோன ஒரு நண்பரின் ஞாபகார்த்தமாக வைக்கப்பட்டது. அதில் கிறிஸ்தவவழக்கப்படி ஜெபமுதலியவைகளோடு ஓர் பிரசங்கமும் நடந்தது. அப்போது கிறிஸ்தவபோதகர் ஒருவர் இறந்துபோனவரது விஷயங்களைப் பேசிக்கொண்டே வரும்போது இந்து சமயத்தைக் கேவலமாகப்பேச ஆரம்பித்தார். மற்றமதத்தைப்பற்றி நிந்தித்து பேசுவது அச்சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாக அவர் மதத்திற்குப் புறத்தனாகிய எனக்கு சமாதானமாகத் தோற்றவில்லை. இது அவர்க்கும் மற்றகிறிஸ்தவநண்பருக்கும் எப்படியோ? அவர் அதிகமாகப் பேசினதில் நான்முக்யமாய் கவனித்தது இரண்டே. முதலாவது மாயையை அகற்றவேண்டுமென்ற மாணிக்கவாசகர் முதலியோர் பெண்ணையுடைய சிவனை வணக்குவதால் என்னபயன்? கிறிஸ்துபோன்ற பெண்ணில்லாத

வரையல்லோ வணங்கவேண்டு மென்றார். இதற்கு ஆதாரமாக "பொய்யெலா மெய்யென்று......" என்னும் பாடலைக் காட்டினர். மாணிக்கவாசகர் பெண்ணையுடைய சிவனை வணங்கினது உண்மையே. வணங்கினதால் இவர் நினைக்கிறபடி பயனில்லாமற் போகவில்லை. இதனை அப்பாடல் முழுவதும் படித்து சரியானபடி அர்த்தம் செய்தால் நன்குவிளங்கும். அம்மாணிக்க வாசகரே ஷை தையலிடங்கொண்ட சிவன் தனக்கு பெண்ணாசை யறுத்தாரெனச் சொல்லியிருக்கிறார். ஆகவே பெண்ணை யுடையவன் பெண்ணாசையை மற்றவர்களிடத்திருந்து அறுக்கமாட்டானென்ற சொல்லிய இக்கிறிஸ்தவர் சொல்லுக்கு விரோதமாக ஷை கடவுள் அறுத்திருக்கிறதாக அப்பாடல் கர்த்தாவே ஒப்புக்கொண்டிருக்கிறாரென்றால், பெண்ணையுடைய அக்கடவுளின் செய்கை வியக்கத்தக்கதும் கொண்டாடத் தக்கதுமா யிருக்கிறது. இந்த மதத்தை தழுவவிட்டு கிறிஸ்தவமதத்தைப் பற்றவேண்டுமென்பதற்கு காரணமாகக் கூறியஅவர்சொல்லே இந்து மதத்தை விடாமலும் கிறிஸ்தவ மதத்தை வெறுத்துப் பார்க்காதிருப்பதற்குந் தகுந்த காரணமாயிருந்ததை நேயர்களே கவனிப்பார்கள். பெண்ணையுடைத்தா யிருத்தலெகுற்றமாகுமோ ஒரு மனிதன் தான் 40-வயதாகும் வரையில் ஏசுவைப்போல் மனைவியில்லாதும் பெண்களோடுஞ் சேராமலுமிருந்து ஜீவனை விட்டால் அவன்புனிதனாவானோ? அவன் கடவுளாவானோ? இல்லையே மற்றவிஷயங்களின் குற்றங்க ளிருக்கக் கூடுமல்லவோ? மனைவியை வைத்திருத்தல் தப்பாகுமோ அப்படி யிருக்கில் எல்லா மதஸ்தரும் விவாகத்தை ஒப்புக்கொள்ளுகிறார்களே, ஆம் இது மனிதர்க்குத் தான் தக்கது. சுவாமிக்கும் மனைவி தகுமோ எனக் கேள்விவரும் இக்கேள்விக்கு முன்பதாக அப்பெண்ணின் இலட்சண மறியவேண்டுமே அப்படி யறியாது பேசுவது என்னவோ? சைவ வைணவ மதங்களில் பெண்ணை எங்கே வைத்திருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாதி சரீரமாகவல்லோ பெண் அமைந்திருக்கிறது. பெண்ணைவிட்டு சுவாமி வேறோ. அப்படி யெங்கும் சொல்லவில்லையே. விரிந்தமனமானது குவிதற் கேதுவாகத் தான் பெரியோர்கள் சுவாமியின் சத்தியையே ஓர்பெண்ணாகக் கற்பித்து நாமரூபங்கள் ஏற்படுத்தினர். மனங் குவிந்து குவிந்து அற்றபோது மேல் நாமரூபங்களா யுள்ளவைகளெல்லாம் அற்று தான் தானைக் காண்கின்றான். இஃதல்லவோ முத்தி அப்படியே மாணிக்கவாசகரும் "பொய்யிலா மெய்யென்று......" என்னும் பாடலையும் பிறகு அவரே நாமரூபங்க ளற்றோய்......" என்று பாடியதையும் பார்த்தால் முரண்படுவதாகத் தோற்றவில்லையா. ஆனால் முரணுதுமோ? முதல்பாடல் பாடியபோது இருந்த அவரது நிலையையும் இரண்டாவதைப் பாடியபோது இருந்த அவரது நிலையையும் கவனிக்கவேண்டாமோ. விரிக்கிற்பெருகும். அன்பர் கவனிப்பார்கள். சத்தியில்லாச்சிவமென்றால் செத்தது போன்றது எனப் பொருள்படவில்லையா! ஆகவே சத்திசிவந்தான் வேண்டும் அதற்கு தான் மாயை யறுக்கும் சத்தியுண்டு. இச்சத்தியையே பெரியோர்கள் ஜீவகாருண்யத்தை முன்னிட்டு பெண்ணாக உருவகப்படுத்தி யிருக்கின்றனர். காரணம் குடும்பசகிதமா யுள்ளவனுக்குத் தான் அதிக இரக்கமிருக்கும் என்னும் மனிதரின் நம்பிக்கை, குடும்பசகிதமாக எம்போலியருக்குத் தோற்றம் கடவுளைப் உறுதிபட்டு அவன் தாள்வணங்க அக்கடவுள் தனது சத்தியால் இவனது மனத்தை ஒடுக்கி, உண்மையை யுணர்த்தி யருள்புரிவான். உண்மையுணர மற்றவை நாம் சொல்லவேண்டியதில்லை இரண்டாவதாக ஷை கிறிஸ்தவர் இந்து நூல்களில் கூறும் பிறப்பு பொய்யென்றும், மனிதன் இறந்து விட்டவுடன் மறுபடியும் பிறக்கிறதில்லையென்றும் சொன்னார். பிறப்பு இல்லை என்று யாதொரு நியாயமுங் காட்டாமல் சொல்லிவிட்டால் போதுமா? இவர் சொற்படி மனிதன் இறந்தபிறகு கதியென்ன. நாம் பார்க்கிறபடி தேகம் மண்ணோடு மண்ணாய்ப் போய்விடுகின்றது. ஆத்மா எங்கேயோ இருப்பதாகவும் நியாயத்தீர்ப்பு நாளில் எல்லாம் சுவாமியண்டை வருகிற தெனவும்

இவர்கள் சொல்லுகிறார்கள். எந்த நல்வினை தீவினைக்குத் தக்கபடி மோட்சம் நரகமடைகிறதெனச் சொல்லுகிறார்கள். நரககஷ்டத்தைப் பார்ப்போம் நரகத்தில் கஷ்டப்படுகிறதென்றால் எது கஷ்டப்படுகிறது. ஆத்மா தேகமில்லாது கஷ்டமனுபவிக்குமா? தேகத்தோடுதான் என்றால் பூமியில் ஆத்மா எந்த தேகத்தோடு கூடி தீவினைசெய்ததோ அந்த தேகம் மண்ணாய்விடப் பார்த்தோம். வேறு தேகத்தோடு ஆத்மா அனுபவிக்கிறதென்றால் ஒரு தேசத்தோடு தீவினை செய்ய இன்னொரு தேசம் கஷ்டமனுபவிப்பானேன்? என்ன கருணையின்மை, அதே தேகந்தான் உயிர்த்தெழுந்ததென்றால் கடவுள் அந்த தேகத்தை மண்ணாகப் போகச்செய்யாமல் அப்படியே தேகத்தோடு மேலே எடுத்துக் கொள்ளக்கூடாதா? அப்படியுமில்லையே பின்னும் தேகம் இல்லாமல் ஆத்மா நரகத்தில் கஷ்டம் அனுபவிக்கிறதென்றால், ஆத்மா ஆவியாயுள்ளதாயிற்றே. ஆவியாகவே கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க முடியுமா? ஆம் என்றால் நியாய விரோதமல்லவா? அனுபவமுமாகுமா? ஆத்மா ஆவி அல்ல பொருள் என்றால்மனிதன் உயிரோடிருக்கும்போது எந்த இடத்தில் என்ன உருவத்தோடு இருக்கிறது. அன்பர் கவனிப்பார்கள். பிறப்பு இல்லையென்று சொல்லும் இவர், உலகத்தில் ஒருவன் உயர்ந்த அந்தஸ்திலும் மற்றொருவன் தாழ்ந்த அந்தஸ்திலுமிருக்க காரணம் என்னமோ. கடவுள் இஷ்டம் என்றால் கடவுள் கருணாநிதியாவாரோ? கவனிக்கவும். விரிக்கிற் பெருகுமென அஞ்சினேம்: மேல் நாட்டாரும் கீழ் நாட்டார் இவர்களில் மகாதேர்ந்தவர்களெல்லாம் எல்லா மதத்திலும் உண்மையுண்டு உண்மையுண்டு. புறமத தூஷணம் வேண்டாம் வேண்டாம் என ஒரே அளவாய் கூச்சல்போடவில்லையா? பிறர்வருந்தும்படி பேச்சினாலும் மற்றவைகளினாலும் நடந்து கொள்ள வேண்டுமென்பது தானோ கிறிஸ்துவின் போதனை? அல்லவே. குற்றத்தை கண்டிக்க வேண்டுமென இவர்கள்சொல்லுவார்களானால், இது குற்றம் அது குற்றம் என்று நியாய பொருத்தமாகவும் அனுபவப் பொருத்தமாகவும் காட்டினாலல்லவோ அங்கீகரிக்கப்படும் அதுவுமில்லையே தங்கள் மதத்தை சிலாகிக்க பிறமதங்களை அநியாயமாய்த் தூஷிப்பானேன்? இந்து.

“கிறிஸ்தவர்கள் இந்துக்களை அஞ்ஞானிகளெனக் கூறுவது ஞாயமா?

மக்களின் அறிவாற்றலுக் கிணங்கப் பல்வேறு வகைத்தாய் நடைபெறும் மதங்களுள் கிறிஸ்தவமும் ஒன்றுமென்பது கற்றவர்களியாவராலும் அறியடபட்டதொன்றும். உலகியல்பு, உயிரிலக்கணம், இறைவன் றன்மை, பந்தசொரூபம், மோக்ஷநிலையென்பவற்றுள் ஒன்றனியல்பேனும் யுக்திக்கிணங்கக்கூறாது, வெறுங்கதைகளையே குருட்டுத்தனமாய்க்கூறும் மதங்களுள் கிறிஸ்துவ மதமுமொன்றுமென்பது அம்மதத்தினது சத்தியவேதமென்றுகூறும் பைபிலென்னும் புத்தகத்தைச் சிறிதூன்றிப்படித்தாற் செவ்வனே விளங்கும். இங்ஙனமாக; அவர்கள் தாங்கள் ஒளியில் இருப்பதாகவும் ஏனையோர் இருட்டிலிருப்பதாகவும் மனப்பால் குடித்து, பிறமதத்தினரை அதிலும் இந்து மதத்தினரை அஞ்ஞானிகளென்றும் அவர்கள் அநுசரித்துவரும் மதத்தை அஞ்ஞான மதமென்னும் கூறிவருகிறார்கள். இங்ஙனம் அவர்கள் கூறிவருவது யுக்தமா? அன்றி அயுக்தமா? வென்பதைச்சற்றுக் கவனிப்பாம். அஃதாவது கிறிஸ்தவமதஸ்தர்கள ஞான அஞ்ஞானங்களின் இலக்ஷணத்தையறிந்து தங்களை ஞானிகளென்றும் இந்து மதத்தினரை அஞ்ஞானிகளென்றும் கூறுகிறார்களா? அங்ஙனமின்றிக் கூறுகிறார்களா? என்பது. அறிந்தேகூறுகின்றார்களெனின்: ஞானஞ்ஞானமென்பவை பொருளா? குணமா? அன்றித்தொழிலா? பொருளெனின், அவை கருத்துப்பொருளா? காட்சிப்பொருளா? இயற்கைப்பொருளா? செயற்கைப்பொருளா? விகாரப்பொருளா? நிர்விகாரப்பொருளா? காரணப்பொருளா? காரியப்பொருளா? பேதகாரணகாரியப்

பொருளா? அபேதகாரண காரியப்பொருளா? விபரீதப்பொருளா? யதார்த்தப்பொருளா? வாய்ச்சியார்த்தப்பொருளா? லட்சியார்த்தப் பொருளா? சாத்திரப்பொருளா? அசாத்தியப்பொருளா? குணமெனின், இயற்கைக்குணமா? செயற்கைக்குணமா? தொழிலெனின் விதிவினையா? மறைவினையா? குணந்தொழிலெனின், எந்தமுதலின் குணந்தொழிலெனப்படும்? உயிரின்குணந்தொழிலா? அன்றி உடலின் குணந்தொழிலா? கடவுளின் உயிரின்குணந்தொழிலா? அன்றி உடலின் குணந்தொழிலா? கடவுளுக்கு உடலுண்டோ வெனின், யாத்திராகமம் 32-ம் அதிகாரம், 16-ம் வசனத்தில் "அந்தப் பலகைகள் தேவனால் செய்யப்பட்டதாயும், அவைகளிலே பதிந்த எழுத்து தேவனாலெழுதப்பட்ட எழுத்துமாயு மிருந்தது" என்றிருக்கிறபடியால் பலகையைச் செய்வதற்கும் அதன்மீது எழுதுவதற்கும் கைகளின் தொழில் முயற்சிவேண்டியதா யிருக்கிறது. இதனால் கடவுளுக்குக் கைகளிருந்திருக்க வேண்டியதாயும் கைகளிருப்பதனால், கால்முதலியவைக ளிருந்திருக்க வேண்டியதாயும் கைகள் முதலிய அவயவங்களாகிய சினைகளிருக்குங் காலத்திலவைகளை யெல்லாமுடைய அவயவியாகிய முதலென்று, முடலிருந்திருக்க வேண்டியதாயுஞ் சித்திக்கிறது. பின்னும் மேற்படி ஆகமம் முப்பத்திமூன்றாம் அதிகாரம், இருபத்திரண்டாம் வசனத்தில், "என்மகிமை கடந்துபோகும்போது நான் உன்னை அந்தக்கல்மலையின் வெடிப்பிலேவைத்து நான் கடந்துபோகுமட்டும் என்கரத்தினால் உன்னை மூடுவேன்" என்றும் 23-ம் வசனத்தில் "பின்பு என் கரத்தை எடுப்பேன்; அப்போது என் பின்பக்கத்தைக் காண்பாய்; என்முகமோ காணப்படாது என்றார்" என்றும் இருக்கிறதே. இதனாலும் கை, பின்பக்கம் முகம் முதலான அவயவங்க ளிருப்பதாக வேற்பட்டு அதாதாரணமாக அவயவங்களுக்கு முதலாகிய உடலிருக்க வேண்டுமென்றும் ஏற்படுகிறது. எஞ்ஞான்றுட லிருக்கிறதோ அஞ்ஞான்றே உடலுக்குவேறாக உயிரிருக்க வேண்டுமாகையால் கடவுளது உயிரின் குணந்தொழிலா அன்றி உடலின் குணந்தொழிலாவெனக் கேட்டதொக்கும்.

கடவுளுக்குரிய இவ்வுடலானது நித்தியமெனப்படுமோ? அன்றி ஓர்காலத்துத் தோன்றியதெனப்படுமோ? நித்தியமெனின் கடவுள் அரூபி என்பதற்குமாறாகிறது. ஓர்காலத்துத் தோன்றியதெனின் அங்ஙனம் தோன்றிய உடலுக்குக் காரணமியாதெனப்படும்?

அன்றியும் ஞானஞ்ஞானமென்பவை பரத்திற்குப் பின்னமா, அன்றி அபின்னமா? ஜீவனுக்குப் பின்னமா, அன்றி, அபின்னமா?

உலகு, உயிர். கடவுளென்னு முப்பொருளுஞ் சத்தென்றுகூறி வருகிறார்களே இவை நித்திய சத்தெனப்படுமா அன்றிக் கற்பித சத்தெனப்படுமோ? இவற்றிற்கு இலக்கணமும், உதாரணமுமென்ன?

மேற்படி திரிபதார்த்தத்துள் வியாபகப் பொருளெவை? வியாப்பியப் பொருளெவை? வியாபக வியாப்பியங்களுக்கு இலக்கணமும் உதாரணமுமெவை?

கடவுள் வியாபகமா யிருக்கின்றதெனவும் அதில் ஜீவர்களும் உலகும் மோட்சமும் நரகமும் வியாப்பியமாய் இருக்கின்றதெனவும் கூறிவருவதால், இச்சீவராதி நான்குவகுப்பும் கடவுளில் சத்தாயிருக்கின்றனவா? அசத்தாயிருக்கின்றனவா? அன்றிச் சதசத்துக்கு வேறாயிருக்கின்றனவா? சத்தாயிருக்கின்றனவெனின் பரத்திற்கு அன்னியமாய்ச் சத்தாயிருக்கின்றனவா? அன்றி அனன்னியமாய்ச் சத்தாயிருக்கின்றனவா? அன்னியமாய்ச் சத்தாயிருக்கின்றனவெனின் ஓர் சத்துள்ள விடத்தில் மற்றோர்சத்து இராதென்னும் நியமமிருத்தலின் கடமுள்ளவிடத்திற் படமும்,படமுள்ள விடத்திற்கடமும் இல்லாவாறு கடவுளுள்ள விடத்தில் ஜீவராதி நான்குவகுப்பும், ஜீவராதி நான்குவகுப்புள்ள விடத்தில் கடவுளுமில்லாமல், கடவுளின் வியாபக லக்ஷணத்

திற்குத்தோஷம் வாய்த்து அதுகாரணமாகக்கடவுள் ஓரிடத்திலிருக்கும் அவ்வியாபகக் கண்டப்பொருளாய் முடியுமன்றோ? முடிவதாற்குற்றமென்னையெனின், கண்டப்பொருளாய் நிகழும் கடமானது கற்பனையாயும் சடமாயுந் துக்கமாயுமிருக்குமாறுகடவுளும் கற்பனையாயும், சடமாயும், துக்கமாயு முடியுமே. இதனால் கடவுளுண்டெனக்கூறும் கிறிஸ்தவமதக்கொள்கை பொய்ப்பட்டுக் கடவுளில்லை யென்னும் நாஸ்திகமதத்தினராகவேண்டுமே. அன்றியும் அனன்னியமாய்ச் சத்தாயிருக்கின்றனவெனின் கடவுளே ஜீவராதி நான்குவகுப்பா யிருக்கிறதாகப் பெறப்பட்டுச் சீவனுக்குரிய அஞ்ஞான சந்தேக விபரீத முதலானவைகளும், உலகுக்குரிய சடத்துவமும் கடவுளுக்குரியவைகளாகி, கடவுளே அஞ்ஞான சந்தேக விபரீதசடத்துவ முதலியவைகளோடு கூடியதாக முடிகிறது. இது விந்தையினும் விந்தை! எது சடமாயிருக்கிறதோ அது கடபடம் போல் அசத்தாயும் துக்கமாயு மிருக்கவேண்டுமென்பது நியமமிருத்தலின், இதுகாரணமாகக் கடவுள் அசத்தாய், அஃதாவது பொய்யாய் முடியும். இதனாலும் கிறிஸ்தவர்கள் நாஸ்திகராக வேண்டியதாய்ச் சித்திக்கின்றதே. இங்ஙனம் தங்களை நாஸ்திகராக்கிக்கொள்ளும் பொருட்டா கடவுளுக்கு அன்னியமாகவும் அனன்னியமாகவும் சீவராதி நான்குவகுப்பும், சத்தாயிருக்கின்றனவென கூறிவருகிறது? வேதாந்தி.

(இன்னும் வரும்.)

திருவருட்சகாயம்.

19-ஆவது யாகப் பிரபாவம்.

வந்தே மாதரம் என்பது, மாதாவை வணங்குகின்றேனென்பதே:—

எதற்கு மாதா? சகல புவனங்களுக்கும் மாதா. புவனம்-உலகம், அம்பிகை-திருவருள் வடிவாகிய நமது மாதா, யாகம்-ஆராதனை, பிரபாவம்-வரலாற்றை எடுத்துச் சொல்லுதல்; அதாவது, சகல புவனங்களுக்குந் தலைவியாய்த் திருவருள் வடிவாயுள்ள நமது லோகமாதாவின் ஆராதனைக் கிரமத்தை எடுத்துப் பேசுதலாம். இன்னும் புவனங்கள்-இதற்குப் பொருள் ஸ்தாவரமாகிய உலகங்கள் என்று சொல்லப்படும். அவை சுத்தம் அசுத்தம் என இருவகைத் தாம். சாந்திய தீதகலையில் பதினைந்து புவனங்களும், சாந்திகலையில் பதினெட்டுப் புவனங்களும் ஆக முப்பத்து மூன்று புவனங்கள் சுத்தம், வித்தியாகலையில் இருபத்தேழு புவனங்களும் பிரதிநிஷ்டாகலையில் ஐம்பத்தாறுபுவனங்களும், நிவிர்த்திகலையில் நூற்றெட்டுப் புவனங்களும் ஆக நூற்றுத் தொண்ணூற்றொன்று புவனங்கள் அசுத்தம். மொத்தத்தில் இருநூற்று இருபத்து நான்கு புவனங்கள். இவ்வாறு மேலோர்கள் சாத்திரங்களிற் கூறியபகுதியைக்கண்டுதெளிக. அம்பிகை-இதன் பொருள் பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தியு மாய்ப் பின்னும் ஈசானியாதி மூர்த்தி யந்தமாகிய பஞ்ச சக்திகளுமாய், வாக்காதி சர்வபூததமனிய அந்தமாகிய அஷ்ட சக்திகளுமாய், மனோன்மணியாதி சரஸ்வதி யந்தமாகியபஞ்ச சக்திகளுமாய்ப் போக சத்தியோக சக்தி வீரசக்திகளுமாய்ச் சகல புவனங்களையுங் கருப்பமாகப் பெற்ற கன்னியுமாய், ஸ்ரீ கைலாய வர்க்கம் ஆனந்தவர்க்கம், மூலவர்க்கமாதிய சித்தர்களுக் கருள்புரியும் ஜகதீஸ்வரியுமான புவனாம்பிகையை ஆராதித்தல் யாகம் என்று சொல்லப்படும். பகவத் கீதையினும் ஸ்ரீ கண்ணபிரான் யாகம் பலவாய்ப்படும் என்றார். யாகம் என்பது யஜ் என்னும் தாதுவினின்று பிறந்தது. ஆராதனை—பூசை யென்றே பொருள் படும். அன்றியும் பிரமம் தெய்வம் பூதம் பிதுர்மானுடமெனவைந்தோர் விதமும் ராஜ பேயம், சோமம் பௌண்டரீக மாதிய பலவுங் கருமயாக மென்றும், இதனால் புத்ராதி முதலிய பல காமியார்த்த சொர்க்க சுகங்களைக் கொடுப்பதாகும் சூக்ஷ்மமானதும் பூர்வ புண்ணிய பலமுள்ள சகல வர்ணத்தாருஞ் செய்யத் தக்கதெனச் சனற்குமார சம்கிதை அகத்திய சம்கிதை முதலான மந்திர கலாபங்களிற் கூறப்

பட்டதும் நிராலம்ப சிவத்தியான சமாதி முதலிய வற்றைப் புசிப்பிக்கும் ஞானவேள்வியென்று மேலோர் கூறுவர். மேலும், ஸ்ரீ பரமேஸ்வரனுக்குச் "(சித்கனன்)" என்றோர் திருநாம முண்டு, சித்கனன் என்றால் பராசக்தியையே திருமேனியாக உடையவன். ஆகலால், சக்தியினின்று சிவத்தையும், சிவத்தினின்று சக்தியையும் பிரிக்கலாகா. இவ்விடத்துப் பிருங்கி முனிவரையும் வேதாசல மான்மியத்தையும் இன்னும் நமது காட்சியாற் காணப்பெறும் ஸ்ரீ ஜம்புகேஸ்வரப் பஞ்சப் பிரகாரப் பிரபாவத்தையும் ஞாபகஞ் செய்க. இத்தகைய கோலங்களாக விளங்கும் ஸ்ரீ புவனாம்பிகைக்கு வந்தேமாதரம். இனி இந்த ஞானவேள்வியைச் சென்ற பதினெட்டு வருஷகாலங்களாக லக்ஷக்கணக்கான பொருள்கொண்டு ஒவ்வொரு சித்திரா பௌர்ணமியினும் பற்பல புண்ணிய ஸ்தலங்களினும் திருக்குருகூர்ச் சித்தராதீன கர்த்தர் ஸ்ரீமத் ஞானசித்தமூர்த்திகள் நடாத்தி வந்தது போலவே, இவ்வருடத்தும் அன்பர்கள்பிரார்த்தித்தவண்ணம் திருக்குற்றாலத் தேனும் செஞ்சியலையிலேனும் செய்தற்கான சகல ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருந்தும், சுதேசியம் என்ற ஆதிதொடக்கத்திலேயே, அதாவது சென்ற தீபாவலிப் பண்டிகை முன்னர், எங்கள் சித்தமூர்த்திகள் தமது சித்தசபா அங்கர்களான பன்னூட்டுப் பிரபுக்களுக்கும் மிகுந்த ஊக்கங்காட்டி நாட்டு உடையே தரிக்க வேண்டுமெனக் கட்டளையிட்டு, அதனுலின்றும் ஆயிரக் கணக்கான கனதனவான்களையும் அனுஷ்டித்துவரச் செய்தபடியே, தற்காலம் வங்காளநாட்டைச் சேர்ந்த பாரிஸாலில் நமது பாபு சுரேந்திரநாத் பானர்ஜிமுதலியோர் பாற்றோன்றி நம்பாரதகண்ட முற்றும் வியாபித்துவரும் துக்கத்தைக் கருதி, நாளது சித்திரை மாதம் 26-ஆந்தேதி மங்களவாரத்தில் நடைபெறக் கூடியதான ஸ்ரீ புவனாம்பிகை யாகத்தின் யந்திரகிரியை மட்டும் நழுவாது தமது ஆஸ்ரமத்திலேயே சுருக்கமாக நடத்திவிட்டு வந்தேமாதர மந்திரத்துக்கு வந்த துக்கம் நீங்கியபின் வழக்கம்போல யாகத்துக் காரம்பிக்கத் திருவுளங்கொண்டது மன்றி, இந்த யாகத்துக்குச் சேருந் திரவியத்தைக் கொண்டு சுதேசிய வயித்தியத்துக் குபயோகமானதும், நமது மகரிஷிகளா லருளிச் செய்ததுமான வைப்புப்பாஷாணுதிகள் பச்சைக் கற்பூரம் ஜடம் சாம்பிராணி முதலிய பலவும் உற்பத்தி செய்யக் கூடியதோர் சுதேசிய மருந்துச் சாலையை ஸ்தாபிக்கப் போவதாகவும், பன்னூட்டுமுள்ள தமது சபையின் அங்கத்தினர்க்கும் பிறர்க்கும் திருமுகம் கட்டளையிட்டதுமன்றி, இப்புதுவை யம்பதியிற் றோன்றும் பொதுக் கூட்டங்கள், பஜனைக் கூட்டங்கள், தேவாலய உற்சவாதி முதலிய பல கூட்டத்தும் வந்தேமாதர மென்னு மகா மந்திரத் தியானம் வளர்ந்தோங்கும் படியான வகைகளும் செய்துகொண்டுவருகின்றார்கள். வந்தேமாதரம்.

வேதபுரி-சுந்தரச்சாமி.

கொலைகளவு.

கடந்த ஏப்ரெல்மீ 24-தேதி யிரவு எட்டரைமணி சமாருக்கு பெஷாவர்சிட்டியுன்-(ராமதாஸ்) பஜாரின் கேட்டில் காவலாக இருந்த போலீஸ்ஜவான்கள் மூன்றுபேரில் ஒருவனைக் குண்டினுல் வீழ்த்தி யவன் டப்பாடவாலியும்-ரைபிலு மெடுத்தோடின திருடனின்னுனென்று பிடிக்கக்கூடாமையால் தப்பின. இரண்டு போலீஸ் ஜவான்களையு மடைத்திருந்தார்கள். பின்னும் 26-தேதி யிரவு எட்டுமணி சமாருக்கு ஷை திருடன் (டப்காரி) கேட்டின் பக்கம் சாதாரண வுடுப்புடனிருந்த ஒரு போலீஸ் ஜவானை கத்தியால் கொன்றுத் தள்ளிவிட்டு அங்கிருந்தோடி (கோகானி) பஜாரில், ஷை திருடனுக்குப் பழமை ஓர் பகைவன் யெதிர்படவே அவனையுங் கொன்றான். உடனே போலீஸ்மூலியமாக தந்தி அனுப்பி ஷை சிட்டி கேட்டுகளெல்லா மடைக்கப்பட்டு ஷை யானக்கபடாமையால் 27-தேதி காலை எட்டுமணி சமாருக்கு கேட்டுக ளெல்லாம் திறக்கப்பட்டது.

ஐப்பல்பூர். மு-வடிவேலவர் பிஷாவர்.

நன்மரண அறிக்கை.

பெங்களூர் பிளாக்பள்ளியின் நாட்டாண்மை ம-ா-ா-ஸ்ரீ எப். டி. சவரியப்பன் பிள்ளையவர்களின் செல்வ குமாரன் அந்தோனிசாமி யென்னும் எங்கள் கண்மணி நிகழும் 1906ஆ மார்ச்சுமீ 31உ சனிக்கிழமை தன் தவத்தாயார், அரிய சகோதரி, சுற்றத்தார் முதலானோர்கள் கதறி புலம்பி பரிதபிக்க கைநெகிழவிட்டு தனதிளம்பருவத்தில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தனன். ஆகையா லிதைக் கண்ணோக்கும் விசுவாசிகள் அந்த ஆத்துமம் இளைப்பாற்றி காகவேண்டிக் கொள்ளும்படி மன்றாடும்.

மரித்தபாலகனின் ஞானதந்தை

D. அந்தோணிபிள்ளை. கோலார் - பாரிகுப்பம்.

கடந்த பெப்ரவரிமீ 15உ வியாழக்கிழமை எனது தமக்கை குமாரத்தி மீனாட்சியம்மாளும், 16உ வெள்ளிக்கிழமை இரவு 9-மணிக்கு என்பெரிய தகப்பனார் இரட்டைமலையவர்களும், 20உ புதன்கிழமை காலை 11-மணிக்கு எனது அண்ணியாரும், 22உ வெள்ளிக்கிழமை என் தமக்கைக் குமாரன் மதுரவாசகமும் தேகவியோகமானார்கள். இப்பெருந்துக்கத்தை அன்பர்கள் நோக்கி யிவ்வான்மாக்கள் சுகநிலையெய்தும்படி திருவருளைப் பிரார்த்திக்குமாறு இங்ஙனமிதை வெளியிட்டோம்

T. S. முனிசாமிதாஸன். (இரங்கோன்)

மாகுிமைக்குரிய பூலோகவியாஸன் பத்திராதிபருக்கு வந்தனம். ஐயா ! தமதுபத்திரிகை சிலமாதங்களில் நட்டென்றுவந்து சேர்கின்றது. அப்படி சேர்வதற்குக் காரணம் சரியானபடி சந்தா வசூலாகாமையென்று நன்கு புலப்படுகிறது. இச் சொற்பதொகையாகிய ரூபா ஒன்றைக் கிரமப்படி செலுத்தாதவர்களைப் பற்றித் தாங்களடிக்கடி பத்திரிகையி லெழுதவதை நோக்க எனக்கே நாணமுடைத்தா யிருக்கிறது ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாயை யனுப்பாம லிப்படியுஞ் செய்வாருண்டா? வருட சந்தா ரூபா. 1-8-0 ஆகவைத்து 15உ ஒரு பத்திரிகையும், மாதக்கடைசிநாளி லொருபத்திரிகையுமாக மாதமிருமுறை பிரசுரிப்பதாக தமதபிப்பிராயத்தைப் போன்று நாங்களனேகர் சம்மதிகின்றோம். இவ்வாறு செய்வது மெத்தவுத்தமம் வருடத்தில் ரூபா ஒன்றைச் செலுத்தாதவர்கள் பிறகு 1-8-0 செலுத்துவதெங்ஙனமெனவும் வருந்துகின்றனம்

குறிப்பு:—கடிதக்காரர்களபிப்பிராயத்திற்குப் பத்திராதிபருத்திரவாதியல்லர்.

முப்பிடமிட்ட தங்கம்.

முப்பிடமிடுந் தங்கம் என்றால் தற்கால சிலவாதிகளை ஊதி ஊதி பேதி கண்டு, உள்ளதை யிழந்து கண்பஞ் சடைந்து, யாதும் பிரயோஜனமில்லாது ஏமாறி நிற்கவைக்கும் தங்கமல்ல. சற்று கைவல்லியமாக்கி வைத்துக்கொண்டு அடித்தால் உடைகிறதென்று விசனிக்கச் செய்யும் தங்கமல்ல. தாய்சேர்த்தால் தான் பிரயோஜனப்படுமென்று சொல்லி விசனிக்க வைக்கும் தங்கமல்ல. ஊட்ட மில்லாததினால் பிரயோஜனப்படாது எனச் சொல்லும் தங்கமல்ல. பொன் வயல்களில் எடுக்கப்படுகிற தங்கமல்ல. பண்டைய காலத்திலும் சிறிது இக்காலத்திலும் பாடும் ஓர்வித பாட்டாகியதங்கமல்ல. என்றால் என்ன தங்கமென்பீரேல். நாக்காகிய தங்கம் என்பாம். நாக்கு என்றால் ஆட்டு நாக்கு மாட்டு நாக்கு, மற்றும் மிருகங்களின் நாக்கல்ல. மனித நாக்கைப்பற்றித் தான் பேசப்புகுந்தது. அதற்குத்தங்கமெனபங்கமின்றி எங்கும் சொல்லுவாம். எப்படியெனில் நாக்கு என்றால் வசனம் வார்த்தை என்பதாகக் கொண்டு அவ்வார்த்தை வாயிலிருந்து புறப்படுமுன் அதை மூன்றுபுடம் போடவேண்டும். முதலாவது நாம்பேசப்புகும் இவ்வார்த்தை நிஜமா என்னும் ஓர்புடத்தில் போடவேண்டும். அந்த புடத்திற்கு நிற்குமானால் சிநேகமா என்ற புடத்தில் போடவேண்டியது. அதற்கும் சருகாதிருந்

தால் இது அவசியமா? என்னும் புடத்தில் போடவேண்டும் இம்மூன்று புடத்திற்கும் நிற்குவார்த்தையே தங்கம். தங்கமான நாக்கு ஆகையால் "பேசுமுன் யோசி", என்ற பழமொழிப்படி யாவரும் பேசும்போது நாக்கை யடக்கி சற்சனமாகப் பேசவேண்டும் அதைக் குறிப்பிக்கத் தான் நாயனாரும்

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்றார். "வாயுள்ளவனுக்குக் காலம்" என்றும் "அழுதபிள்ளை பால்குடிக்கு" மென்றும் பேசத்தெரிந்தால் பிழைக்கத் தெரியுமென்றும் பழமொழி வழங்கும். ஆகையால் அப்படி பேசினாலும் கடினசொற்களை உபயோகப் படுத்தாமல் பேசுவது தான் தங்கம். தீயசொற்களைக் களைந்து தெய்வ துதி செய்வது தான் தங்கம். பொன்னாக்கா யிருப்பது புண்ணாக்கா யிருக்கப்படாது. அவ்வகையான புண்ணாக்குகளிற் சிலதை யுரைப்பாம். முதலாவது பரிகாசநாக்கு அதாவது வாணநாக்கு, பிரசங்க காலத்தில் தன்னிலையை மறந்து சிறு காரியங்களுக்கும் முன்னிலையானவரைப் பரிகசிக்கும். தெய்வதூஷணையான வார்த்தைகளை இடைக்கிடை பேசும், நீதிமார்க்கங்களைப் போதித்து சற்சங்கத்தில் சிறந்திய பெரியவர்களைப் பழிக்கும் எம்மதமும் சம்மதமென் றுணராமல் பிறமததூஷணம் செய்து பரிசசிக்கும். தான் திருடினதை மறந்துபோதமே வடிவனைந்த வரைத் திருடன் என்று சொல்லும். கல்வி விஷயத்தில் நியாயமான வழியில் இதோடதேசமாய்ப் பேசத் தெரியாது உருவத்தின் மீது குறைகூறுவான் வேண்டி தான் ராஜாங்கத்தாரால் மொட்டையடிக்கப்பட்டதை மறந்து சத்விஷயத்தில் ஈடுபட் டவ்வாறுள்ளவர்களைச் சாமானியர்கள் புகழ உளறும் நாக்கு, பரிகாசம் செய்யும் நாக்காம். தாம்செய்யும் படோடோபத்தைச் சிந்திக்காமல் கலகத்தை யுண்டாக்கிக் கொள்ள ஏழையோரை படோடோபக்காரர் எனப் பகரும் நாக்கு பரிகாச நாக்காம். ஆகையால் பரிகாசப்பேச்சுப் பாதகப்பேச்சாகும். வேடிக்கைப்பேச்சு வேதனைப்பேச்சாகும் ஆகையால் பரிகாசப் பேச்சுகளை யடக்கி வார்த்தையாலேயே முப்புடம் போட்டெடுத்த தங்கம். கோள் நாக்கு கொடிய நாக்காம். அந்த நாக்கு சிநேகிதனைச் சிநேகிதனுக்கும், வேலைக்காரனை யெஜமானுக்கும், பிள்ளைகளைப் பெற்றோருக்கும், பெண்சாதியைப் புருஷனுக்கும், ஆகவொட்டாமல் செய்கிறது. இந்நாக்கால், உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பது போலும், அதிரசம் திருடிய நாய்க்கு அங்கொரு செருப்படி இங்கொரு செருப்படி என்பதுபோலும். இங்கு மங்கும் குண்டணித்தனம் செய்து இடிபடும். இவ்வாறு செய்யாத நாக்குத்தான் முப்புடமபோட்ட தங்கம்.

அவதூறு நாக்கு: இந்நாக்கு அறுவருப்பான நாக்கு. பழிக்கிற நாக்கைப் பாதியறுத்து அவதூறு நாக்கை அடியோடறுக்க வேண்டுமென்பதாலும் தூற்றுநாக்கே கூற்றுநாக்கு என்பதாலும், பெயரைக் கெடுக்கும் பேய்க்குண நாக்கென்பதாலும், அம்பட்டவேலைசெய்தால் அறைக்காசாவதுண்டு அவதூறு சொன்னால் அணுவாகிலு முண்டோ என்பதாலும், அவ்வவதூறு பேசாத நாக்கே முப்புடம் போட்ட தங்கமாம். நாக்குமேலும் மேலும் அவதூறு, பரிகாசம், கோள்முதலியன செப்பாதிருக்கக் கடவுள் கண்ணுக்கு ஒரு மூடிவைத்து நாக்குக்கு இரண்டு மூடி வைத்திருக்கிறார். கண்களையும் காதுகளையும் இரட்டையாகப் படைத்து நாக்கை ஒற்றையாகப் படைத்திருக்கிறார். அப்படி யிருந்தும் கவனியாது மேற்கூறிய குறைகளைப் பேசும் நாக்குகள் மக்குக் கட்டைகளென்றும், கவனித்துப்பேசும் நாக்குகள் தங்கமென்றும் சொல்ல வேண்டும். "தீயினாற் சுட்டபுண் உள்ளாறு மாறாதே நாவினாற் சுட்டவடு என்று" திருவள்ளுவர் சொன்னது கவனித்து விதமறிந்து பேசுவதும், ஆளையறிந்து பேசுவதும், காரிய மறிந்துபேசுவதும், அவையறிந்து பேசுவதும், கருத்தறிந்து பேசுவதும், அன்பு நிறைந்து

பேசுவதும், அருள்மொழியாய்ப் பேசுவதும். தீவிரமாய்ப் பேசாது இருமுறைகேட்டு ஒருமுறை பேசுவதும், கண்டிப்பதிலும் கருணையுடன் பேசுவதும், எச்சரிப்பதில் பட்சமாய்ப் பேசுவதும், புண்ணை ஆற்ற மருந்து போடவேண்டியிருக்க, புண்ணில் கோலிடுவது போல் பேசாது இதமாகப் பேசுவதும், முப்புடம் போட்டெடுத்த தங்கமென்பார்கள் பெரியோர்கள். ஆகலின். அத்தகைய நாக்கு நன்குபாராட்டி பலராலும் மெச்சப்படும், இம்மையில் புகழையும் மறுமையில் சுகத்தையும் கொடுக்கக் கூடியது இதோபதேசமான வார்த்தையாகிய நாக்கேயாகையால் அந்நாக்கை முப்புடம்போட்டுபயோகித்தல் நலம்.

எத்தனைபேர் ?

கடவுளைத் துதிக்கிறவர்களெத்தனைபேர் தூஷிக்கிறவர்களெத்தனைபேர் இனிமையாகிய முத்தமிழை விரும்புகிறவர்கள் யெத்தனைபேர் அதை புறக்கணிக்கிறவர்களெத்தனைபேர், கல்வி வந்தர்களைப் புகழ்ந்து உபசாரஞ்செய்கிற அன்பர்களெத்தனைபேர் அவர்களுடைய விஷயமுணராது புறங்கூறுகிறவர்களெத்தனைபேர்? உலகம் நிலையற்ற வாழ்வென்றெண்ணி தம்மை யடுத்தார்க்கு உபகாரம் செய்கிறவர்கள் எத்தனைபேர். அபசாரம் செய்கிறவர்களெத்தனைபேர்? சொன்ன வார்த்தை நிறைவேற்றுகிறவர்களெத்தனைபேர் தவறி நடக்கிறவர்கள் எத்தனைபேர்? நந்தமிழ்நாட்டில் தமிழ்ப்பத்திரிகைகளை ஆதரிக்க விரும்பும் அன்பர்களெத்தனைபேர் அலட்சியம் செய்கிறவர்களெத்தனைபேர்? பத்திரிகைகளை வாங்க பிறரைத் தூண்டுகிறவர்களெத்தனைபேர் வாங்குகிற அன்பர்களையும் தடுக்கின்றவர்கள் எத்தனைபேர்? பத்திரிகைகளை வாசிப்பதினுல் பிரயோஜனமுண்டென உணர்ந்து வாங்கி வாசிப்பவர்களெத்தனைபேர் பிரயோஜனமில்லையென மந்தமதியால் விடுப்பவர்கள் எத்தனைபேர்?நமது பத்திரிகையின் வளர்ச்சியைக் கருதி சந்தாவை நிறுத்தாமல் அனுப்பிவிடுகிற அன்பர்களெத்தனைபேர், எவ்வளவு காலமனுப்பினும் காசுகொடாமலிருப்பவர் எத்தனைபேர்? நம்மையும் நந்தமிழ்ப்பத்திரிகையையும் மேம்பாடாக்க எண்ணி ஆதரணைச் செய்யும் ஸ்ரீமான்கள் எத்தனைபேர். ஆதரணைசெய்வதாக வாக்குமாத்திரம் அளித்து மௌனஞ்சாதிப்பவர்களும், கேட்டும் பதில்வார்த்தை யேனுமில்லாதவர்களும் எத்தனைபேர்? நமது பத்திரிகையை பெருக்கமாக்க நன்கொடை யளிப்பவர்களும் இதை யாதஇருமுறை பத்திரிகையாகவாவது வாரப்பத்திரிகை யாகவாவது வளர்த்து நடத்தவேண்டுமென எண்ணி நம்மையும் அவ்வாறு செய்ய கோருகிற அன்பர்கள் எத்தனைபேர். அழுக்காற்றால் இப்பத்திரிகைநின்று விடவேண்டுமென எண்ணுகிறவர்களும், நின்று விடுமெனத் தீர்மானிக்கிறவர்களு மெத்தனைபேர்? இப்பத்திரிகையின் சந்தா வெகுகுறைந்தது வருடத்திற்கு ரூபா ஒன்றுதானே இதைக்காலந் தவறாமல் கொடுத்து பத்திரிகை நடத்துவதுத்தமமென எண்ணி பாக்கியில்லாதிருக்கும் அன்பர்களெத்தனைபேர், எவ்வளவு எழுதினும் படித்துப்படித்து சந்தாவை அனுப்பாதிருப்பவர்கள் எத்தனைபேர்? இவ்வாறு எழுதிய இவ்விண்ணப்பத்தின் தாத்பரியத்தைக் கண்டு தாங்கள் பாக்கியாகிய சந்தாவை உடனே அனுப்பி வைக்கிறவர்களெத்தனைபேர்,இதையும் படித்து சந்தாவை அனுப்ப காலதாமதம் செய்கிறவர்களெத்தனைபேர்? இவ்வளவெழுதி சந்தா சேகரிக்காமல்விட்டால் பத்திரிகை நடப்பது எப்படி இவ்வாறெழுதுவது நல்லதே யென்பவர்கள் எத்தனைபேர், சந்தா நாம் கொடுக்கவில்லை யென்று இம்மாதிரி யெழுதினர் ஆகையினால் பாக்கிசந்தாவையும் அனுப்பாமல் அமுக்கிக்கொண்டு பத்திரிகைவேண்டாம் என எழுதிவிடலாமென்றெண்ணுகிறவர்கள் எத்தனைபேர்? இத்தனைபேருக்கு மித்திரராகவே இச்சமுற வேண்டியவர் பத்திராதிபராகையால் நித்தமும் உத்தமத்தையே விரும்புகிறோம்.

(பத்—ர்.)

றகர ரகர பேதங்கள்.

அறி—தெரிந்துகொள்.
அரி—கடல், காற்று, குரங்கு, பொன், படுக்கை, பகை, புகை, விஷ்ணு, சிங்கம் முதலிய பலவாம்.
அறிகள்—கள்ளென்பதையறிவாயாக.
அரிகள்—பகைவர், குரங்குகள், கடல்கள்
அறிமடம்—அறிந்து மறியாமை, பேரறல்.
அரிமடம்—வைணவர்மடம்.
அறிமருகன்—மருமகன் இன்னானென வறிவாயாக.
அரிமருகன்—விநாயகன்.
அறியணை—அணையை யறிவாயாக,
அரியணை—சிங்காசனம்.
அறியல்—தெரிந்துகொள்ளல் எதிர்மறையில் தெரிந்துகொள்ளேல்.
அரியல்—அரிதல்.
அறியேறி—ஏறிய பின்னறிந்துகொள்வாயாக.
அரியேறி—தர்க்கை,
அறிவாள்—அவள்தெரிந்துகொள்வாள்.
அரிவாள்—கொடுவாள்.
அறிவை—நீ தெரிந்துகொள்வாய்.
அரிவை—தெய்வப்பெண்,
ஆறி—தணிந்து, அடங்கி, சொஸ்தமாகி.
ஆரி—சோழன்.
ஆறிடம்—ஆறுஸ்தானம்.
ஆரிடம்—எவரிடம்.
ஆறியம்—ஆறவிதமானகீர்த்தி, வாத்தியம்.
ஆரியம்—அழகு, பண்டம், வடமொழி, ஓர் தேசம்.
ஈறிலி—முடிவில்லாதவன்.
ஈரிலி—பல்லீரில்லாதவன்.
உறி—பாண்டங்கள் தொங்கும் உறி.
உரி—தோல், ஓரளவு, உரியென்னேவல்.
உறியார்—உறியுள்ள (உறி+ஆர்.)
உரியார்—சொந்தக்காரர், தக்கோர்.
உறிவை—உறியை வை.
உரிவை—தோல்.
ஊறி—வினையெச்சம், நனைந்து.
ஊரி—நகர்ந்து.
எறி—விட்டெறி
எரி—தீ.
எறிதல்—விட்டெறிதல்,
எரிதல்—பற்றியெரிதல்.
எறித்தல்—ஒளிவீசல்.
எரித்தல்—கொளுத்திவிடல்.
எறிநாள்—எறியவேண்டிய எறிகின்ற நாள்.
எரிநாள்—கார்த்திகைநாள்; பற்றி யெரியுநாள்.
எறிமணி—சேமக்கலம்.
எரிமணி—தீவீசுமணி.
ஏறி—மேலேறி.
ஏரி—பெருந்தடாகம்.

பெங்களூர் ம-௱-௱-ஸ்ரீ, C. சகாதேவம்பிள்ளை யவர்கள் மனையாளும்,
ஷை யூர் செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர்
ஸ்ரீ. C. S. ஞானப்பிரகாஸம் பிள்ளையவர்கள் தாயாருமாகிய,
ஜானகியம்மாள் தேகவியோகப் பிரிவாற்றாமையால்;
"பூலோகவியாசன்" பத்திரிகாசிரியர் பாடிய
குளகவிருத்தம்.

நித்தியனாய் விளங்கியருட் கருணைமுகி லெனவோங்கு நிமல னீதே
சத்தியமென் றெல்லவர்க்கும் விளக்கவெனத் தமதருளின் றன்மை நாட்டி
யுத்தமத்திற் பலவுயிரைப் படைத்தளித்தில் கழித்திடுமவ் வுரிமை யேற்றச்
சுத்தமிகு மனத்தினளாய் ஜானகியம் மாளுலகைத் துறந்தா ளென்போம்,
என்றாலு மன்னவளின் கொடையழகும் நடையழகு மிசைந்த வாய்மைக்
குன்றாத வுபச்சார மொழியழகும் விழியழகுங் குவல யத்தோர்
நன்றாயுங் கலைஞானப் பிரகாச மோடுஜக நாத னென்ன
நின்றாரும் புதல்வர்களுக் கறிவூட்டு மதியழகும் நினைக்குந் தோறும்;
ஏவர்கலங்கா ரெவருருகா ரெவரழுகை யொழிந்திடுவா ரென்னே யிந்த
நவமாது சென்றனளே யென்சென்று ளனைத்திலைக்த்து கலியார் யாவர்
அவமாக வொருசெயலும் புரியாவெம் மன்னையுயி ரகன்ற தெல்லாஞ்
சிவமாகக் கருதியவர்க் கமுதளிப்ப மேலுலகஞ் சேர்தற் கென்றே.

நீலகிரி V. M. பொன்னுசாமிப்பிள்ளையவர்கள் பாடியது.

திருவார் கமலமுகவெழிலுஞ் செம்மைநலமுஞ் சிறந்தொளிரும்
பெருமாண் பினுக்கோ ரிலக்காகப் பிறங்குமுயர்ஜா னகியம்மாள்
திருவார் முத்தி யடைந்ததுநற் றவத்தோர்க் கின்ப மென்றாலு
மருவா ருலகி லெம்போல்வார் மனமோர் கணமுந் தாளாதே.

சமாசாரக்கொத்து.

இரங்கோன்:—கம்பை ஸ்ரீ சிவசுப்ரமண்ய சுவாமிக்குப் பிரதிவருடம் நிறைவேறி வருவதுபோல இவ்வருடமும் வெகு விசேடமாக உற்சவங் கொண்டாடப் பட்டது. ஸ்ரீமான் பெ. மா. மதுரைப்பிள்ளை ராய்பஹதூர், ஸ்ரீமான் வி. முத்தக் குமாரசாமி முதலியார் பி. ஏ. இவர்கள், மற்றும் பல ஸ்ரீமான்களின் பொருளுதவி கொண்டு ம-ா-ா-ஸ்ரீ எ. மு. பாலையமூர்த்திப் பரதேசியாரவர்கள் அன்பர்களுக்குப் பலவிதோபசார கைங்கரியங்கள் செய்ததுடன் நமது விருப்பின்படி யாமெழுதிய "சுகிர்த சோணமாலை" எனும் நூலைய மவ்விடத்துச் சிவபஜனை யடியார்களோடு அரங்கேற்றஞ்செய்தனர். அன்னவர் நமக்குச் செய்த வித்வஸன்மானம் பெரிதும் பாராட்டப்பட்டது.

இவ்வைபவத்தின் பொருட்டு இரங்கோன் நிவாசியும், சென்னை மக்கிமாநகர் "இந்துசைவசுபால்யசங்க" காரியதுரந்தரருமாகிய ம-ா-ா-ஸ்ரீ, மு. அ. உலோகநாதம் பிள்ளையவர்களபீஷ்டப்படி ஷை சங்காதினரா லியற்றப்பெற்ற "திருவேண்டற் றொடைய லணி" என்னும் பாசுரமும் ஷை சந்நிதானத்தே யரங்கேற்றஞ் செய்யப்பட்டது.

இங்கிலாந்தில்:—19-வயதுள்ள ஒரு சிறுவன் சந்தடி சேட்காமலும் புகையில்லாமலும் சுடக்கூடிய ஒரு துப்பாக்கி செய்திருக்கிறதாயும் இங்கிலீஷ் அரசாக்ஷியார் அதை 10-லட்சம் ரூபாய்க்கு கேட்டும் இவன் கொடுக்க வில்லையென ஜனனுகூலன் கூறுகிறது.

நியூஜிலண்டு:—தேசத்தில் ஒரு நீரூற்று புதிதாக உண்டாயிருப்பதாயும் அந்த ஜலம் சோடாவாட்டரைப்போ லிருப்பதால் வைத்தியர்கள் சோடாவாட்டருக்குபதில் உபயோகிக்கலாமெனச் சொல்ல அப்படியே உபயோகிக்கப்பட்டு வருகிறதாம்.

லண்டனிலுள்ள:—ஒரு தையற்காரன் தண்ணீரில் விழுந்தவனை அமிழ்ந்தாதபடி காக்கத்தக்க ஓர்வகை மேற்சட்டையைத் தைத்திருக்கின்றானாம்.

ஐரோப்பாவில்—கடிதாசியால் கைச்சட்டை கால்சட்டைகள் அழகாயும் உறுதியாயுஞ் செய்யப்படுகின்றது.

ஸ்பெயின்—தேசத்திலுள்ள ஒரு ஏழைப் பெண்ணுக்கு 8 அடி நீளம் கூந்தலிருக்கிறதாம்.

திருவேற்காட் டுற்சவம்:—இம்மாதம் 6வ. ஆதிவார மிரவு இவ்வுற்சவம் வெகு விமரிசையாக நிறைவேறியது. அக்காலத்துச் சென்னை விஜயஞ்செய்திருந்த கோலார் தங்கவயல் கண்ட்ராக்டர் ஸ்ரீமான் பி. எம். முனிசாமிப்பிள்ளை யவர்களுடனும், ஷையூர் ஸ்ரீமான் எ. பி. பெரியசாமிப்பிள்ளையவர்களுடனுஞ் சென்று ஷை சுவாமி தரிசனஞ்செய்யப்பெற்றனம். சப்தஸ்தல சுவாமிகள் சந்திப்பு ஆற்றுற்சவங்கொண்டாடப்பெற்ற வித்தல விசேடமே விசேடம்.

பிரமாண்டமான முத்திரை.—பிரான்ஸ் தேசத்துக் குடியரசாங்கத்தார், பிரஜாதிபதிகள் தெரிந்துகொள்ளப்படும்போது முத்திரிக்கிற முத்திரை (சீல்) யொன்றிருக்கிறது. அதை ஒரு வண்டியின்மேலேற்றி மூன்றுபேர் இழுக்கத்தக்க அவ்வளவு பிரமாண்டமானதாம். 1871-௵ முதல் அம்முத்திரை உபயோகப்பட்டு வருகிறது. ஒரு இராக்ஷத கடிகாரம்.—பிரான்ஸில் அத்தியக்ஷராலயத்து உப்பரிகையொன்றில் வைக்க இராக்ஷத கடிகாரமொன்று செய்யப்பட்டிருக்கிறது. கடிகாரத்தின் நிறை 2-டன். உள்ளேயிருக்கிற வெண்கலமணியின் நிறை 6-டன். அதையடிக்கிற ஆயுதம் 220-பவுண்டு. இதுதவிர கால், அரைமணிகளடிக்க வேறு 23-மணிகளும் அதற்குள் உண்டாம்